

# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

உள்ளுறை


திருமணம் செல்வக் கேசவராய முதலியார், எம். ஏ. அவர்கள் உருவப்படம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரவுரை ௨௪௯

வடமொழிச் சொற்கள் தென் சொற்கள் ௨௯௫

நால்வர்களும் கல்வெட்டுக்களும் ௩௧௯

பண்டைத் தமிழ்ச் சொற்கள் ௩௨௪

தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத் தீர்மானம் ௩௨௬

சரசுவதி பூசையும் ஏடு தொடங்கலும் ௩௨௯

தென்புலத்தார் யார்? ௩௩௧

சைவப் பஞ்சாங்க அச்சுப் பிழை ௩௩௮



18 DEC
JL
031ன211,N26
N31·9·7
19646



...uth India Saiva Siddhanta Works
...ublishing Society, Tinnevelly, Ltd.

... 8 பிரசுரம் ... ஆடி ... தனிப்படி அணா 5.

## 'செந்தமிழ்ச் செல்வி' இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

### (Editorial Board Members)

தலைவர்

1. திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M. A., M. L.,
*அட்வகேட், தாகூர் சட்ட விரிவுரையாளர்.*

---

2. ,, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
*தலைமைத் தமிழாசிரியர், பிஷப் ஹீபர் கலாசாலை, திருச்சி.*

3. ,, துடிசைக்கிழார். சிதம்பரனாரவர்கள்,
*போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், நாமக்கல்.*

4. ,, M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.,
*பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.*

5. ,, பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
*மகிபாலன்பட்டி.*

6. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள் B. A.,
*வழக்கறிஞர், சாத்தூர்.*

7. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
*தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.*

8. ,, பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்,
*அமைச்சர், தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி.*

9. ,, அ. மு. சரவண முதலியாரவர்கள்,
*தமிழாசிரியர், லாலுகுடி.*


---

## *பிரசோற்பத்தி வருட*

# சைவப் பஞ்சாங்கம்

*கிளேஸ் பிரதி விலை அணா 2.* *ரப் அணா $1\frac{1}{2}$*

குறிப்பு:—1. *தனிப்பிரதி வேண்டுவோர் 1-அணா தபாற்றலையுஞ் சேர்த்தனுப்புதல் வேண்டும்.*

2. *வியாபாரிகட்குத் தக்க கழிவு தரப்படும்.*

8. *முன் 7 ஆண்டுப் பஞ்சாங்கமும் கிடைக்கப் பெறும்.*



பச்சையப்பன் காலேஜில் தமிழாசிரியராயிருந்தவரும்,
தமிழ், தமிழ்வியாசங்கள், திருவள்ளுவர், கம்பர், கலிங்கத்துப்பாணி வசனம்
முதலிய நூல்களியற்றியவருமாகிய
திருமணம்- செல்வக்கேசவராய முதலியார், எம். ஏ.

ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது.

| | | |
|---|---|---|
| சிலம்பு ௯ | மெய்கண்டான் யாண்டு-எ௱அ ஆடித்திங்கள் 1931ஆம் ஜூலைமீ—ஆகஸ்டுமீ | பரல் எ |

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

உயிரா வணமிருந் துற்றுநோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத்தந்தால்
உணரப் படுவாரோ டொட்டிவாழ்தி
அயிரா வணமேறு தானேறேறி
யமரர்நா டாளாதே யாரூராண்ட
அயிரா வணமேயென் னம்மானேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே.

அயிராவணமேறாது=கைலாயத்திலுள்ள யானைமே லேறாது
ஆனேறேறி=எருதின்மே லேறி
அமரர் நாடாளாதே=விண்ணுலகத்தை ஆளுதல் செய்யாது
ஆரூராண்ட=திருவாரூரை யாளுதல் செய்த
ஐராவணமே=பிருதிவி மூர்த்தியே (நில உருவினனே)
என்னம்மானே=எனது தந்தையே

உயிராவணமிருந்து=மூச்சு (வெளியே) விடாமலிருந்து, அதாவது, மூச்சு அடக்கி

உற்றுநோக்கி=அசையாமற் பார்த்த வண்ணமே பார்த்துக்கொண்டிருந்து

உள்ளக் கிழியின்=உள்ளமாகிய துணியில்

உருவெழுதி=(உனது அடிகளுடைய) வடிவம் எழுதி

உயிராவணம்=உயிராகும் தன்மை யுண்டாகும்படி, அதாவது, தன் முனைப்பு இல்லாதபடி

உன்கைத் தந்தால்=உன்வசம் ஒப்புவித்து விட்டால்

உணரப்படுவாரோடு=நீ உயிருடைய தன்வயமின்மையை அதற்கு உணர்த்தி உன்னால் அவ்வுண்மை உணரப்பட்ட உயிரோடு

ஒட்டி வாழ்தி=இரண்டற (உயிருடன்)ச் சேர்ந்து கலந்து அதற்கு உன்னுடைய பேரின்பத்தைக் கொடுத்து வாழச் செய்கின்றாய்

நின்னருட்கண்ணால் நோக்காதார்=ஆதலால் இவ்வாறு நினது அருளை அடையாதவர்கள்

அல்லாதாரே=மக்களாய்ப் பிறந்தும் மக்கள் அல்லாதவர்களாவார்கள்.

## விளக்க உரை

அயிராவணம் (ஐராவணம்) என்பது கைலாய மலையிலுள்ள இரண்டாயிரம் கொம்புகளுடைய ஒரு யானை. அயிராவணமேறாது ஆனேறேறி அமரர் நாடாளாதே ஆரூராண்ட என்பது "வான் பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ளல்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறிய வண்ணம் விண்ணுலகத்தை விட்டு இம்மண்ணுலகத்துக்கு வந்து உயிர்களை யாட்கொள்ளும் சிவபெருமானுடைய அருட்டிறம் கூறுகின்றது.

அயிராவணம்=ஐராவணம். இரா என்னும் வடமொழி பிருதிவி (நிலம்) என்று பொருள்படும். இராவணம்=பிருதிவியின் மயம். இ என்ற எழுத்து ஆதிவிருத்தி சந்தியால் ஐகாரமாயிற்று. ஐராவணம் என்பது பிருதிவி மயமான சிவபெருமானுடைய உருவத்தைக் குறிக்கிறது. பிருதிவி சிவபெருமானுக்கு எட்டு உருவங்களில் ஒன்று. திருவாரூர் பிருதிவித்தலம் ஆதலின் அங்கே புற்றிடமாகத் திருமேனி கொண்டருளி யிருக்கின்ற சிவபெருமானை ஐராவணமே என்று அடிகள் விளித்தனர்.



உயிராவணம்=உயிர்த்தல் என்பது மூச்சுவிடுதல்.

உயிராவண்ணம்=மூச்சு விடாதபடி யிருத்தல். இது பிராணாயாமம் என்று கூறப்படும் யோகத்துக்குரிய எட்டு உறுப்புக்களில் ஒன்று. உள்ளத்தை அடக்குதற்கு மூச்சடக்கம் (பிராணாயாமம்) துணையா யிருக்கின்றது. மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு என்றார் திருமூலர்.

உற்றுநோக்கி=உற்றுநோக்கி என்பது நுண்ணிதாய்ப் பார்த்த வண்ணமே பார்த்துக் கொண்டிருத்தல், அதாவது, மனதைப் பிற பொருளிற் செல்லாமற் றடுத்துத் தியானப் பொருளைப் பார்த்துக் கொண்டிருக்கும்படி நிறுத்துதல்.

உள்ளக்கிழி=உள்ளமாகிய கிழி; இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. கிழி என்பது கிழிக்கப்பட்ட துணி (Painter's Canvas).

உரு எழுதி—தியானத்துக்காகச் சிவபெருமானுடைய அடிகளை உள்ளத்திலே எழுதுதலை அடிகள் "இம்மை யுன்றாளென் னெஞ்சத் தெழுதி வை" என்று திருச்சத்திமுற்றம் திருவிருத்தம் (செ. 6) லும் "உழைத்துந் துள்ளியு முள்ளத் துள்ளேயுரு விழைத்தும்" என்று திருப்பேரெயில் திருக்குறுந்தொகை (செ.8) யிலும் குறிப்பிட்டிருத்தல் காண்க. மாணிக்கவாசக அடிகளும் "படமாக வென்னுள்ளே தன்னிணைப் போதவை யளித்து" என்று திருப்பூவல்லி 14-வது பாட்டிற் கூறியருளினார். திருமூலர் திருமந்திரத்தில் "ஞானக் கூத்தன் படந்தான் செய்துள்ளாட் படிந்திருந்தானே" என்று கூறினார்.

உயிராவணம்—உயிராம் வண்ணம் என்பது; உயிராம் என்பதிலுள்ள மகர வொற்றுத் தொகுத்தும் வண்ணம் என்பதிலுள்ள ணகர வொற்றுத் தொகுத்தும் நின்றன. உயிரானது தன்முனைப்பு அற்ற பொழுதுதான் உண்மையில் உயிராகின்ற சிறப்புத் தன்மையை அடைதலின் உயிராவணஞ் செய்திட்டு என அடிகள் கூறினார்.

உன் கைத் தருதல் என்பது உயிரானது தன்வயமில்லாதபடி வியாபகமான சிவபெருமானுடைய வேட்கை அறிவு செயல்களில் தனது வேட்கை அறிவு செயல்கள் அடங்கி நிற்றல்.

உணரப்படுவார்—ஒருவர் தியானத்தால் சிவபெருமானுடன் ஒன்றித் தன் வயமழிந்த பொழுது அவர், தான் என ஒரு முதலாக நின்று உணராததால் உணரப்படுவாரோடு என்று அடிகள் செயப்பாட்டு வினையாற் கூறினார்.

ஒட்டி வாழ்தி=ஒட்டி வாழ்தல்; சிவபெருமானுடன் இரண்டற (அத்துவிதமாய்)க் கலந்து அவனது திருவடி இன்பத்தை நுகர்தல்.

உலகிலுள்ள சில நெறிகள்போல் சிவநெறியானது அறிவு நூலில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளை நம்பி ஒழுகுகிற வெறுங் கொள்கை நெறி (Theoretical Religion) அன்று; சைவர் ஒருவர் அருள் நூல்களைக் கற்று ஐயந்திரிபு அறும்படித் தெரிந்தார் வாயிற் கேட்டும் சிந்தித்தும், பின் பக்குவம் வந்தகாலை இறைவனால் அதிட்டிக்கப் பெற்ற குரவனுடைய உபதேச உண்மை மொழியைக் கேட்டும், கேட்ட உண்மையைத் தனது உள்ளத்தில் பற்றும்படிச் சிந்தித்தும், சிந்தித்த உண்மையைத் தன்னுள்ளே தானாகத் தெளிந்தும், தெளிந்த உண்மையை நிட்டை கூடி இறைவனுடன் இரண்டற ஒன்றிப் பேரின்பம் நுகரச் செய்யும் நடைநெறி. (Practical Religion) இந்நடைச் சிவநெறி (Practical Saivaism) சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும், முறையே ஒன்றுக்கொன்று மேற்பட்ட, நாலு நிலைகளை உடையது. ஒவ்வொரு நிலையிலும் நாலு நிலைகள் உள. இந்த அருமைத் தேவாரப்பாட்டில் திருநாவுக்கரசு அடிகள் யோகத்தைக் கூறுகின்றார். யோகத்துக்குச் சாதனமாயுள்ள உறுப்புக்கள் எட்டு. இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரம், தாரணை இரண்டும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதி யோகத்தில் ஞானம். உயிராவணம் என்றதனால் பிராணயாமமும் (மூச்சடக்கம்) அதற்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய இயமம், நியமம், ஆசனமும்; உற்று நோக்கி என்றதனால் பிரத்தியாகாரமும் தாரணமும்; உள்ளக்கிழியின் உருவெழுதி யென்றதனால் உருவத்தியானமும், உன் கைத்தந்தால் என்றதனால் அருவத்தியானமும், ஒட்டி வாழ்தி என்றதனால் சமாதியும் இந்தப் பாட்டால் குறிப்பிடப்பட்டன.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

---



# Comparative Philology

# வடமொழிச் சென்ற தென் சொற்கள்

[வித்துவான் G. தேவநேசன் அவர்கள்]

உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் Turanian, Semitic, Aryan என முப் பெரும் பிரிவுகளாயடங்கு மென்பது முன்னர்க் கூறினும். அவற்றுள் ஆரியக் கவையில் Teutonic கிளைக்குத் தலைமையானது வடமொழி யென்னும் சமஸ்கிருதம்; ஏனைய German, Dutch, English முதலியன.

மேனாட்டு மொழியாராய்ச்சிப் புலவர், இலக்கண ஒற்றுமையாலும் இலக்கியச் சொற்களின் ஒற்றுமையாலும் வடமொழியை ஜெர்மன் மொழிக்கு இனமாகக் கண்டிருக்கின்றனர். ஆகவே இந்திய ஆரியரும் ஜெர்மானியரும் ஒரு காலத்தில் ஒரே வகுப்பினராய் ஒரேயிடத் (மேலாசியா) தில் வாழ்ந்திருக்கவேண்டும். சரித்திர நூல்களெல்லாம் பெரும்பாலும் கிறிஸ்துவுக்குப் பிற்பட்டனவாதலின், அவர்க்கு முற்பட்ட வரலாறுகளை யெல்லாம் உணர்தற்கு மொழிநூலே சிறந்த கருவியாகின்றது. ஒரு வகுப்பாரை இன்னாரென்று உணர்தற்கு அவரது பேச்சினும் சிறந்த கருவி பிறிதொன்றில்லை.

"நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்"

ஆகவே, இந்திய ஆரியர் ஜெர்மானியர்க்கு இனமென்றும் அவர் பேசிய மொழியும் ஜெர்மனுக்கு இனமென்றும் அறியப்படும். அதை அவ்விரு மொழிகட்கும் இன்றியமையாத சில பொதுச் சொற்களாற் காட்டுதும். இங்கிலீஷ் ஜெர்மன் மொழியினின்றும் பிறந்ததாதலின், கீழ் வரும் இங்கிலீஷ் சொற்களெல்லாம் ஜெர்மனென்றே தெளிக. (Jutes, Saxons, Angles என்ற மூவகை ஜெர்மானிய வகுப்பினரே கி. மு. 449-ல் ஜெர்மனியினின்றும் பிரித்தானியாவுக்குப் போய் இங்கிலீஷ் மொழியை வழங்கினவர்)

| English | சமஸ்கிருதம் | English | சமஸ்கிருதம் |
|---|---|---|---|
| brother | பிராதா | nose | நாசி |
| book | புஸ்தகம் | nine | நவம் |
| common | சாமானியம் | person | புருஷன் |
| create | சிருஷ்டி | prime | பிரதமம் |
| daughter | தௌஹித்ரி | preacher | புரோகிதர் |
| | (மகளின் மகள்) | science | சாஸ்திரம் |
| decimal, | | str. (an old | |
| decem | தசம் | suffix) | ஸ்திரீ |
| dentem | தந்தம் | establish | ஸ்தாபி |
| eight | அஷ்டம் | stand | ஸ்தா (root) |
| father | பிதா | shaving | க்ஷவரம் |
| germ | கிருமி | special | விசேஷம் |
| generation | ஜெனனம் | seven | சப்தம் |
| gravity | குருத்துவம் | six | சஷ்டி |
| house | ஆசயம் | sui | சுயம் |
| heart | ஹிருதயம் | serve | சேவி |
| item | இதம் | she | சா |
| inter | அந்தர் | sweat | ஸ்வேத |
| idea | ஐதீகம் | terra | தரை |
| ignorance | அஜ்ஞானம் | tree | தரு |
| ignition, ignis | அக்னி | two | த்வா |
| murther, | | three | திரீ |
| murder | ம்ருத் | that | தத்: they-தே |
| mother | மாதா | voice, vocal | வாக்கு |
| mediator | மத்தியஸ்தர் | verto (root) | விருத்தம் |
| name | நாமம் | word | வார்த்தை |

இனி இலக்கண ஒற்றுமைகளாவன:—

1. மெய் மொழி முதலாதல்
2. ஒருமை இருமை பன்மை என எண் மூன்றாதல்
3. பெயரெச்சங்கள் பால் எண் வேற்றுமைகளைக் காட்டல்
4. இலக்கணப் பால் (grammatical gender)
5. வினைமுற்றுக்கள் பால் காட்டாமை
6. பயனிலை வினைச்சொல்லாயே யிருத்தல்

இவை போன்றவை இன்னும் எத்துணையோ உள. முக்கியமானவை மட்டும் இங்கு உதாரணமாகக் குறிக்கப் பட்டன



ஆரியம் என்னும் குறியீடு முதன்முதல் ஆரிய மொழிகள் எல்லாவற்றிற்கும் பொதுவாய் வழங்கிற்று. பின்பு Teutonic வகுப்புக்கு மட்டும் வழங்கத் தலைப்பட்டது. அதன் பின்பு இந்திய ஆரிய மொழியாகிய சமஸ்கிருதத்திற்கே சிறப்பாய் வழங்கிற்று. இந்திய ஆரியர் நால் வகுப்பாராயினும், அவர்களுக்குள், பிராமணர் மட்டும் இக் குறியீட்டைத் தமக்கும் தம் மொழிக்கும் வரையறுத்துக் கொண்டனர்.

ஆரிய வகுப்பு மொழிகளுள், Latin, Greek என்ற இரண்டும் முற்பட்டவை. Teutonic மொழிகள் அவற்றிற்குப் பிற்பட்டவை. ஐரோப்பிய அரசுகட்கெல்லாம் முந்திய கிரேக்க வரச சரித்திரம் கி. மு. 3000-ம் ஆண்டினின்று தொடங்குகின்றது. ஆகவே, சமஸ்கிருத ஆரியர் வட இந்தியாவிற் குடியேறினதும் அதே காலமாய்த்தா னிருக்கவேண்டும்.

உலகில் முதன்முதல் உண்டானது தமிழ். தமிழர் (8000 B.-C.) குமரி நாட்டினின்றும் வடக்கே போய்ச் சின்ன ஆசியாவில் குடியேறினர் என்பது பாபிலோனியக் குகை வெட்டாலும் குழி வெட்டாலும் தெரியவருகின்றது. அங்கேதான் தமிழ் சேமியக் (Semitic) கிளையாகத் திரிந்தது. எபிரேயம் (Hebrew) அரபி (Arabic) முதலியன சேமியக் கிளைமொழிகள். அவற்றையடுத்து Latin, Greek முதலிய ஆரியக்கிளைமொழிகள் பிறந்தன. ஒரு தாய்மொழியினின்றும் ஒரு கிளைமொழி உண்டாயிருப்பின் அதன் இன்றியமையாத முதற் சொற்களெல்லாம் தாய்மொழியாயிருக்கும். ஏனையவெல்லாம் அதற்குச் சொந்தமான ஆக்கச் சொற்களே. அவற்றுள் ஒரு பகுதி பிறமொழிகளினின்றும் கடன் கொண்ட திசைச் சொற்களாயிருக்கும். ஒரு மொழியின் ஆக்கச்சொற் பெருக்கத்திற்கும் சுருக்கத்திற்கும் காரணம் அம்மொழியை வழங்கும் மக்களறிவேயாகும்.

ஆரியக் கிளைகளில் ஒன்றாகிய Teutonic என்பது Greko-Latin என்ற பெருங்கிளையினின்றும் கிளைத்த பொழுதே (அதாவது சமஸ்கிருத ஆரியர் இந்தியாவுக்கு வருமுன்னமே) அதில் நூற்றுக் கணக்கான தமிழ்ச் சொற்கள் கலந்திருந்தன.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்து தமிழரோடு (கி. மு. 2500) கலந்தபின் எண்ணிறந்த தென் சொற்கள் வட மொழியிற் கலந்தன. ஆரியர் வருமுன்னும் வந்தபொழுதும் வட இந்தியாவில் வழங்கி வந்தவையெல்லாம் கொடுந்தமிழ் மொழிகளே.

ஆரிய வருகைக்கு முன் சமஸ்கிருதத்தில் அல்லது Teutonic மொழிகளிற் கலந்திருந்த தென் சொற்களிற் சில:—

| Tamil | English | Sanskrit |
|---|---|---|
| அரத்தம், இரத்தம் | red | ரக்தம் |
| அரசன் | Rajah | ராஜா |
| அகம் | *Gr*. eikos, house | ஆசயம் |
| ஆன்மா | animos | ஆத்மா |
| இலக்கம் | lakh | லக்ஷம் |
| உதகம் | water | உதகம் |
| எட்டு | eight | அஷ்டம் |
| கோடி | crore | கோட்டி |
| சக்கரம் | circle | சக்கரம் |
| சக்கரை | sacharine | சர்க்கரை |
| சின்னம் | signum | சின்னம் |
| தரை | terra | தரா |
| தரு | tree | தரு |
| நாகம் | snake | நாகம் |
| நாவாய் | *L*. navis | நௌகு |
| பாதர் | father | பிதா |
| பாதம் | foot | பாதம் |
| பேசு | speak | பாஷி |
| மன் | man | மநு |
| மத்தி | mid | மத்தி |
| மனது | mind | மனஸ் |
| மாத்திரை | metre | மாத்ரா |
| மாதர் | mother | மாதா |
| வண்ணம் | varnish | வர்ணம் |
| வடிவம் | body | ப்ரதிமா |
| வரை | marry | வரி |
| வாரணம் | *L*. marinus | வருணு |
| வேட்டி | *L*. vestis | வேஷ்டி |
| | vesture | வஸ்த்ரம் |



சமஸ்கிருதத்திற்கு முதற்காவியம் இராமாயணம். இராமர் இருந்தது இடைச்சங்க காலம். ஆகவே தொல்காப்பியமும் அகத்தியமும் இராமாயணத்திற்கு முற்பட்டனவாம். வட மொழிக்கு முதல் இலக்கணம் பாணினீயம். பாணினி பாரதத்திற்கும் பிற்பட்டவர். பாரதகாலம் 1000 B. C.; இராமாயண காலமோ 2000 B. C.; ஆகவே பாணினீயம் தொல்காப்பியத்திற்குக் குறைந்தது ஆயிரம் ஆண்டுகட்குப் பிற்பட்டதாகும். ஆரிய வருகைக்கு முன்னமே தமிழர் முத்தமிழிலும் பலகலைகளிலும் தேர்ந்திருந்தனர். அகத்தியம் வழிநூலே யன்றி முதனூலாகாது. இதன் விரிவை யெல்லாம் எமது முதற்றாய்மொழி (The classica Prima) யிற் கண்டுகொள்க.

இனி, வடமொழிச் சென்ற தென்சொற்களாவன:—

**மதம்**—மதி + அம் = மதம்.

தேய் + உ = தேய்வு—தேவு—தே—தீ

தேய்வு + அம்—தேய்வம்—தெய்வம் *Gr*. Theos.

தேய்வம்—தேவம்—தேவன்.

தெய்வம் என்பது முதலாவது நெருப்பையும் பின்பு சிவத்தையுங் குறிக்கும். (திருவாசக விரிவுரை காண்க).

சிவ + ம் = சிவம்—சிவன்—சிவை.

உரு + திரம் = உருத்திரம்—உருத்திரன்-ருத்ரன் = சினன்—உருத்தல் = சினத்தல், திரம் தொழிற்பெயர் விகுதி.

அரி + அம் = அரம்—அரன்.

ஓ—ஓம்—ஓங்காரம் or ஓகாரம்.

ஓவென்பது மூலவொலிக் குறிப்பு. ஓல், ஓலி, ஓலம், ஓசை, ஓதை முதலிய ஓசைபற்றிய சொற்களெல்லாம் ஓகார ஒகார முதன் மொழிகளாதல் காண்க. ரீ என்பது ரீங்காரமானாற் போல ஓ என்பது ஓங்காரமாயிற்று.

உரு + திரம் + ஆக்கம் = உருத்திராக்கம் — ருத்திராக்ஷம் (உருத்திராக்க விளக்கங் காண்க.)

வி + பூதி = விபூதி. புழுதி—பூதி: வி, உபசர்க்கம்.

ஆணவம்: ஆள்—ஆண்—ஆண்மை—ஆணவம்.

மாய் + ஐ = மாயை : ஐ, தொ.வி.

காமி + அம்=காமியம், காம் + இயம் என்றும் பிரிக்கலாம். இயம் ஒரு தொழிற்பெயர் விகுதி. காம் + அம்=காமம் + அர்=காமர்.

குமரன், குமரி—கொம்மை (திரட்சி) என்னும் பண்பினடியாகப் பிறந்தவை. c. f. virgin *Gr.* orago-to swell. சேய் (Zeus) முருகன், வேலன் என்பன குமரற்கு மறுபெயர்கள்.

**சண்டிகை:**—சள்—சள்ளை—சண்டை—சண்டன்—சண்டி—சண்டிகை.

**காளி:**—கள்—கள்ளம்—காளம்—காளி.

—களம்—களங்கம்=கருப்பு.

**சினன்:**—சின + அம்=சினம்—சினன்.

**விஷ்ணு:**—விண்—விண்டு. விண்ணைப்போல் நீலமாயும் எங்கும் நிறைந்துமிருப்பவன்.

**மாயோன்:**—மா—மாய்—மாயோன். மா=கருப்பு.

**கிருஷ்ணன்:**—கள்—கள்ளன்—கண்ணன்.

மாயோன், கண்ணன் முதலிய பெயர்கள் கிருஷ்ணவதாரத்திற் புதிதாய் உண்டானவையல்ல. அதற்கு முந்தியே வழங்கினவை. "மாயோன் மேய காடுறை யுலகமும்" என்று தொல்காப்பியத்திற் கூறப்பட்டிருப்பது காண்க.

**அரங்கன்:**—அரங்கம்—அரங்கன். அரங்கம்=ஆற்றிடைக் [குறை

**இராமன்:**—இராமம்—இராமன்.

இராமம் என்பது திருமண்காப்பு. இராமம்=இரேகை வரி. இராமக் கரும்பு என்னும் வழக்கு நோக்குக. வடநாட்டில் இதைத் தவருக நாமம் என்று வழங்குகின்றனர். இராமர் ஒரு வைணவ பக்தர். இராமருக்கு முன்பே மால் வழிபாடு தமிழ் நாட்டிலிருந்தது.

இரண்டு, அலப்பு, இலக்கு, உலாத்து முதலிய சொற்கள் உயிர் முதல் நீங்கி வழங்குவதுபோல அரங்கன் இராமன் முதலிய சொற்களும் உயிர் முதல் நீங்கி வழங்குகின்றன.

**நாராயணன்:**—நாரம் + அயனன்.



**வருணன்:**—வார் + அணம்—வாரணம்—வாரணன்—வருணன்.

வார் + இ=வாரி. வார் + இதி=வாரிதி.

**ஆத்மா:**—ஆன் + மா=ஆன்மா. ஆன்=பசு. மா பெருமைப் பொருள் விகுதி. மான் என்பது ஈறு குறைந்து நின்றதெனினும் ஒக்கும். *Gr.* animos. வடமொழியில் ஆத்மா சரீரத்தைக் குறிக்கும்.

**நரன்:**—நரை + அன்=நரன்=நரைப்பவன்.

**பதி:**—பதிக்குத் தலைவன்; இடவாகு பெயர். பதி=நகர், வீடு.

**பசு:**—பாசத்தாற் கட்டப்பட்டது பசு.

**பாசம்:**—பசுமை—பச்சை—பாசி—பாசம். பாசம்போற் பிணிக்குங் கயிறு; கயிறுபோற் பிணிக்கும் மலம்.

பாசம் என்பதற்கு ஆசை யென்று பொருள் கூறினும் பொருந்தும்.

**நரகம்:**—நரகல்—நரகம்.

*c.f*, dungeon, from dung.

காயம்—ஆகாயம். காயம்=கருப்பு. 'காயப் பெயர்வயின்' என்று தொல்காப்பியத்துள் வருதல் காண்க.

**பூதம்:**—பொது—பொதுக்கு—பொந்து—பூதம்.

**உலகம்:**—உல + கு=உலகு. உலகு + அம்=உலகம்.

உலத்தல்=அழிதல்.

நீர் + அம்=நீரம்—நாரம்=நார் + அம்.

சலி + அம்=சலம். சலி + அனம்=சலனம். சலி + அதி=சலதி—சலித்தல்=அசைதல். சலிப்பு என்னும் உலக வழக்கையும் அசைவு என்னும் மெய்ப்பாட்டையும் ஒப்பு நோக்குக.

காலம்—கால் + அம் = காலம். சமை + அம் = சமையம். (விதி—முதனிலைத் தொழிலாகு பெயர்).

**வானநூல்**—சூரியன்—சுர்—சுரன்—சூரன்—சூரியன். *Gr.* sol. சுர் என்பது ஒரு வெம்மைக் குறிப்பு.

சுர் + அம்=சுரம்=காய்ச்சல், பாலைநிலம்.

மதி—காலத்தை மதித்தற் கிடமானது.

மதி + அம் = மாதம். *c.f.* Moon. மானி + அம் = மானம்.
மதியால் உண்டாவது மத்தம் *c.f.* *L.* lunacy from [luna.
தாரகை—தார் போல்வன.
புதன்:—புத்தன்—புதன். புத்தி—உத்தி.
சனி:—சல்—சல்லியம்—சனி.

கோள்கள் ஏழேயன்றி ஒன்பதாகா. ஆயின் நாட்களும் ஏழன்றி ஒன்பதாயிருத்தல் வேண்டுமென்றறிக.

இராசி = (race) கூட்டம்.
மேஷம்:—மேழகம்—மேழம்—மேஷம்.
ரிஷபம்:—விடை—விடலை—விடபம்—இடபம்.
ஆ + விடை = ஆவிடை. விடைத்திருப்பது விடை.
*c.f.* குண்டாயிருப்பது குண்டை.
கோழிவிடை என்னும் உலகவழக்கைக் காண்க.
கும்பம்: கும்—குமி—கும்பு—கும்பம். கும்பல் = குவிதல்.
கும்பு + இடு = கும்பிடு. கும்பு + அல் = கும்பல்
+ அம் = கும்பம்
+ அனை = கும்பனை (Company)
கும்பு—கூம்பு. குமி—குவி. கும்பு—குப்பு—குமி + ழ் [குமிழ்.
குப்பு + ஐ = குப்பை. குப்பு + அல் = குப்பல்.
மீனம்: மின்—மீன்—மீனம்.
கன்னி:—கன் + இ = கன்னி. கன்னுதல் = பழுத்தல்.
*c.f.* maturity from mature—to ripen.
துலாம்: தால்—தாலம்—துலை—துலாம்.
சிங்கம்: சிங்கு + அம் = சிங்கம், அழிப்பது.
சிங்கல் + குறைதல், அழிதல்.
கற்கடகம்: கல் + கடகம் = கற்கடகம், கல் நண்டு.
வடவை: வடம் + ஐ = வடவை, வடக்குள்ள நெருப்பு
*c.f.* Aurora Borealis, the northern light.
aurora—fire; borealis—northern.

வடவை + முகம் = வடவை முகம். இதைப் படலா முகம் எனத் திரித்துப் பெட்டைக் குதிரை என்று பொருளுரைப்பர்.



"வடவைக்கனலைப் பிழிந்தெடுத்து"—வீரராகவர்

"அக்கடலின்மீது வடவனல் நிற்கவில்லையோ"—தாயுமானவர்.

பூகோளம்:—கோளம்: குழு—கோளம்—கோலி.
மண்டலம்: மண் + தலம் = மண்டலம் = வட்டம்
பூமி வட்டமாயிருப்பது தமிழர்க்குத் தெரிந்திருந்தது.

இடை யென்னும் உறுப்புப்பெயர் அம்சாரியை பெற்று இடமானாற்போல, தலையென்னும் உறுப்புப்பெயர் அம்சாரியை பெற்றுத் தலமாயிற்று. இடப்பெயர்கள் பெரும்பாலும் சினைப் பெயர்களாகவே யிருக்கும்.

"கண்கால் புறமகம் உள்ளுழை கீழ்மேல்
பின் சார் அயல் புடைதேவகை எனாஅ
முன்னிடை கடைதலை வலமிடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்."
—தொல்—சொல்—வேற். சூ. 21.

மண்டலம்—மண்டிலம். மண்டலித்தல்—வட்ட மிடுதல்.
திங்கள் மண்டிலம் = திங்கள் வட்டம்.
கண்டம்: கண்—கண்டு—கண்டம்

தீவு: தீர் + உ = தீர்வு—தீவு. தரைப் பாகத்தினின்றும் தீர்ந்திருப்பது. இதைத் த்வீபம் என்று திரித்து இரு பக்கத்தில் நீரால் சூழப்பட்டிருப்பதென்று பொருளுரைப்பர்.

இலக்கணம்:—
இலக்கு + அணம் = இலக்கணம்—லக்ஷணம்.
+ இயம் = இலக்கியம்—லக்ஷியம்.
இலக்கித்தல் = எழுதுதல்—சீவக: செய் 180
*c.f.* grammar from *Gr*, gramma, a letter
*Gr.* grapho, to write,
literature from letter.

கரம், காரம், கான், ஏனம்—தமிழ்ச்சாரியைகள்.
ஆய்தம்: ஆய் + தம் = ஆய்தம். ஆய்தல் = ஆரிதல்.
மாத்திரை: மா + திரை = மாத்திரை. மாத்தல் = அளத்தல்.
+ திரம் = மாத்திரம்.

மா என்பது ஒரு எண்ணளவுக்கும் ஒரு பரப்பளவுக்கும் [பெயர்.

பகுதி: பகு + தி = பகுதி—பாதி பகு—வகு.
+ அம் = பக்கம்-பக்ஷம்—பாகம். பக்கம்—பாங்கு [—பாங்கன்
+ அல் = பக்கல்—பகல்—பால்
+ ஐ = பகை; பகு—பா: பாத்தீடு—பாதீடு.
பா + தி = பாத்தி. பகுதி—பிரக்ருதி

மூலம்: முள்—முளை—மூலம்

விகுதி: விகு + தி = விகுதி. விகு—வீ. வீதல் = முடிதல்.
விகுதி—விக்ருதி.

சூத்திரம்: சூ + திரம் = சூத்திரம், சுருக்கம்

வண்ணம்:—பண்—பண்ணம்—வண்ணம்—வண்ணகம்.

சந்தம்—ஒலிக்குறிப்புப் பற்றியது. சந்தடி என்பது வழக்கு.

பண்ணத்தி: பண் + அத்தி = பண்ணத்தி.

உருபு:—உரு + பு = உருபு; உரு + உ = உருவு. உருவு + அம் = உருவம்—உருத்தல், தோன்றுதல். உரு × அரு c.f. உறு × அறு. உருவம் from ரூபம்.

காரணம்:—கரு—கருவி—கரணம்—காரணம்—காரியம்.

கரு—கருப்பு—கருப்பம். மேகம் சூல்கொண்ட பின் கருத்திருத்தல் காண்க.

ஏது: ஏது என்று வினவுவதற்குக் காரணமா யிருப்பது.
c. f. the why; the how.

அம்போதரங்கம்:—அம்பு + தரங்கம்

அம்—அம்பு, தரங்கு + அம் = தரங்கம், கரையைக் குத்துவது.

உவமை: உவ + மை = உவமை. உவத்தல் = விரும்புதல். உவமவுருபுகள் பெரும்பாலும் விருப்பு வெறுப்புப் பொருள்களிலேயே வரும். உவமை—உபமா

உ-ம். நாட = விரும்ப. புகல—போல. புகலல்—விரும்பல்.
c. f. like similar, to be pleased with.

உருவகம்: உரு + அகம் = உருவகம். ஒன்றை மற்றோர் உருவாகச் சொல்லுதல். உருவகம்—ரூபகம்.



இசை, நாடகம்—

சுரம்: சுரை + அம் = சுரம். சுரை = துளை. நாகத்திற்குப் பிரியமானது நாகசுரம்.

தொனி: தொள்—தொளை—தொண்டை—தொனி

இராகம்: அராகம்—இராகம். கலிப்பாவுறுப்பு.

தாண்டவம்: தாள்—தாண்டு—தாண்டவம்

நடம்—நட—நடி—நடம்—நட்டம். நடி + அம் = நடம்.
நடி + அகம் = நாடகம்.

மண்டலம்—mandoline. சுரவீணை—Saraphina

குடம்—குடை + அம் = குடம், வளைந்திருப்பது. குடம்—கடம்

அரசு

அரி—அரம்—அரன்—அரசு—அரசன் *Gr.* archon

அரைசன்—அரையன்—Roy, Royal

மரங்கட்குள் அரசுபோன்றிருப்பது அரசமரம்

சேரன்: சாரல்—சேரல்—சேரன்—சேரலன்—கேரளன்.

சோழன்: சோளம்—சோழம்—சோழன்.

கள்ளர் வெட்டிச் (மக்காச்) சோளம் சோழநாட்டில்தான் சிறப்பாய் விளைகிறது.

பாண்டியன்: பாண்டி + அன் = பாண்டியன், வீரன்.
பாண்டி = வட்டம். பாண்டில் = எருது.
பாண்டியன் காளை போன்றவன்.

பாண்டவர் சம்பந்தப்பட்டவன் என்று Caldwell கூறியிருப்பது தவறு. பாண்டியன் பெயர் பாரதத்திற்கு 1000 ஆண்டுகட்கு முற்பட்ட வால்மீகி ராமாயணத்திற் கூறப்பட்டுள்ளது.

சாமம்: சமம்—சாமம்

பேதம்: பேதி + அம் = பேதம்

தானம்: தா + அனம் = தானம்

தண்டம்: தண்டி—தண்டு—தண்டம்.
தண்டி + அனை = தண்டனை. தண்டி—தடி.
தடித்தல் = பருத்தல். தடிதல் = வெட்டுதல்
முதல் தண்டனை தடியாலடிப்பதா யிருந்தது.

சினைப்பெயர்கள்—

முகம்: முகர்—முக+ம்=முகம், முகத்தல். முக—மோ.
முகர்—நுகர். முகப்-நுகம். முகம்—மூக்கு-மூஞ்சி
—முகடு. முக+பு=முகப்பு. முக+வை=முகவை.

முகம் முதலாவது மூக்கின் பெயராயிருந்து பின்பு தானியாகு பெயராய் முகத்திற்காயிற்று. வடமொழியில் வாயை மட்டும் குறிக்கும்.

இரத்தம்+அரத்தம்—இரத்தம். அரக்கு, அலத்தகம்
இரத்தி என்பவை செந்நிறத்தைக் குறிக்கும்.
பித்து+அம்=பித்தம்—பைத்தியம்.
கரு+பு=கருப்பு. கருப்பு+அம்=கருப்பம்.
மொழி—முழம்—முட்டு—முட்டி—முஷ்டி. பதி+அம்=
பாதம்.

வடிவுப் பெயர்கள்

வடிவம்=படி—படிவு—படிவம், bcdy, பிரதிமா.
—வடி—வடிவு—வடிவம்.
வட்டம்: வள்+தம்=வட்டம். வள்+இ=வளி
+தி=வட்டி—வண்டி +அம்=வள்ளம்
+து=வட்டு—வண்டு=வளையல்
+தை=வட்டை—வடை. வளை+அம்=வளையம்
+ஐ=வளை +அல்=வளையல்
வளையம் வடமொழியில் வலயம் என்று வழங்கும்.
வட்டம் விருத்தத்தின் திரிபன்று.

திசைப் பெயர்கள்

திக்கு+ஐ=திகை, திகைத்தற்குக் காரணமாயிருப்பது.
திகை—திசை
குண்டு—குண்டம்=குணம்—குணக்கு
குடம்: குடை—குடம், கதிரவன் வளையுமிடம்—குடக்கு.
உத்தரம்: உ+தரம்=உத்தரம். உ=மேல், உயர்வு
தெற்கு+அணம்—தெற்கணம்—தெக்கணம்—தக்கணம்
தெக்கணம்—Deccan. c. f. கொங்கு+அணம்=கொங்
கணம்.



எண்ணுப் பெயர்கள்—

இலக்கம்=எண். இப் பொதுப்பெயரே நூறாயிரத்துக்
குச் சிறப்புப் பெயராயிற்று. lakh—லக்ஷம்
எட்டு—அஷ்டம்
கோடி—கோட்டி. கோடி=கடைசி யெண்
நாலு—நால்—நாலா—நாலு

பல்வகைச் சொற்கள்—

தமிழம்—த்ராவிடம்
வேட்டி: வெட்டுவது வேட்டி. வேட்டி—வேஷ்டி
c. f. துணிப்பது துணி; அறுப்பது அறுவை.
முட்டி—முட்டியாற் செய்யும் போர். முட்டி—முஷ்டி
c. f. wrestle from wrist
காகம்—காக்கா—காக்கை—காகம்
மயில்—மயூரம். கூகை—கூகம்
கலை—கல்+ஐ. படி+அம்=பாடம்
சுற்றுரு—சூத்ரம். கலி+யாணம்=கலியாணம்
கலித்தல்=தழைத்தல், யாணம்=புதுமை, புதுவருவாய்.
பழம்—பலம். பழு+அம்=பழம். அடவி—அடர்ந்
திருப்பது
பரி+அம்=பாரம்—பாரி. தரி+அம்=தாரம்
தருக்கு+அம்=தருக்கம்—மிகுத்துக்காட்டுதல்
குடி—குடில்—குடிலம்—குடீரம். சாய்+ஐ=சாயை
இ—இதம்=இப்படி. பவளம்—ப்ரவாளம். நீலம்—நீலம்

இனி, அக்கா, அத்தா, ஆணி, அம்மா, அம்பா, அகுட, ஆளி, கடு, காவேரி, குசம், கூச்சம், குடி, கூன், குளம், கோட்டை, கட்டில், சாம், சா, பட்டணம், பொன், பள்ளி, வெள் முதலியன வடமொழியினின்றும் கால்டுவெல் கண்காணியார் எடுத்துக் காட்டிய தென் சொற்களாம். இன்னும் இவை போன்ற ஆயிரக் கணக்கான தென் சொற்கள் வடமொழிவாய்ப் பட்டுள்ளன.

தமிழரசு தலைதாழ்த்தபின் செந்தமிழாராய்ச்சி சில நூற்றாண்டுகளாக இல்லாமையான், வடமொழிப் புலவர் தமிழரை ஒரு பெட்டை மிரட்டு மிரட்டி வந்தனர். இப்போதோ

மொழியாராய்ச்சியால் எண்ணிறந்த வடமொழி வாய்ச்சொற்கள் முடவன் குதிரைகளாய்த் திரும்பி வருகின்றன. சில தமிழர் வடமொழி வாய்ப்பட்ட சொற்களை யறிந்திருந்தும் அவற்றை எடுத்துக் கூறத் துணிந்திலர்.

"மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையாற்
பொய் போலும்மே பொய்போலும்மே"

வடநூலார் தமிழ்ச் சொற்களைக் கடன் கொண்டபின் அவற்றைத் தமிழ் வடிவில் வைத்திருப்பதில்லை. உடனே உருத் தெரியாது மாற்றிவிடுவர். மறைக்காடு, பழமலை போன்ற இடப் பெயர்களைக்கூட வேதாரண்யம், விருத்தாசலம் என்று மொழிபெயர்ப்பாராயின் வேறு என் சொல்வது? இவ்வாறு எத்தனையோ தென்சொற்கள் வடமொழிச் சென்று வாருகாய் வழங்குகின்றன. அவை நளராங் காலமும் நண்ணும்.

வடமொழியிலுள்ளதெல்லாம் வடசொற்கள் என்று மொழிநூ லுணராதார் சிலர் கொண்டிருக்கின்றனர். மூல முதன் மொழியாகிய தமிழ் தவிர வேறு எந்த மொழியாவது பிறசொற்க ளில்லாததில்லை. ஒரு சொல்லை இன்ன மொழி யென்று அறிதற்கு அதன் பகுதிப் பொருளையும் அதனின்றும் திரிந்த பல்வேறு சொற்களையும் பார்க்கவேண்டும். அவை எந்த மொழியிலுள்ளனவோ அந்த மொழிக்கே அது உரியதாம். வினைச் சொல்லாயின் புடைபெயர்ச்சி (Conjugation) வேண்டும். பெயர்ச்சொல்லாயின் பெயரிலக்கணம் (Declension) வேண்டும். கல் என்னும் வினை கற்றான், கற்றாள், கற்றார், கற்றது, கற்றன, கற்ற, கற்க, கற்பித்தான், கற்கப்பட்டது, கற்றிலன், கலை எனப் பல வடிவுகளிலும் புடை பெயரவேண்டும். வடமொழியிலோ அது கலா (கலை) எனத் தொழிலாகுபெயராய் மட்டும் நிற்கும். இஃதோர் உதாரணம்.

சில வடமொழிப் பற்றுடையார் முனிவர் என்னும் சொல்லுக்கு முனி என்பது பகுதி யென்றறியாமல், மவுனம் செய்பவர் முனிவர் என்று வடமொழிவழி யுரைப்பர். 'ஐயன்' என்னும் தமிழ்முறைப் பெயரை ஆரியன் என்பதின் சிதைவாகக்



கூறுவர். இங்ஙனமே ஏனைச் சொற்களுக்கும் அவர் வடமொழியைக் கற்பிப்பதுண்டு.

ஒரு வகுப்பாராவது பிற வகுப்பாருடன் இயையின்றித் தாமாய் உலகத்தில் வந்தவரல்லர். அங்ஙனமே தமிழ் தவிர ஒரு மொழியாவது பிறமொழியின் கலப்பின்றித் தானாய் வந்ததன்று என்று தெளிக.

---

# நால்வர்களும் கல்வெட்டுகளும்

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள், B.A., B.L.]

## மாணிக்க வாசகர்

### I

ஸ்ரீமத் மாணிக்கவாசகர் சைவ சமயாசாரியர்களின் பெயர் வரிசையில் நாலாவதவராகச் சொல்லப் பெறுகிறார். ஆனால் அவருடைய திவ்வியப் பாடல்களின் கனிவும் பொருளும் நோக்கினால், முதலாவதவராகக் கொள்ளல் வேண்டும். மற்றைய சமயாசாரியர்களைக் காட்டிலும் மாணிக்கவாசகருடைய புகழ் உலகெங்கும் பிற நாடுகளிலும், பிற பாஷைகளிலும், பிற மதத்தாரிடத்தும் சென்று விளங்குவது அவருடைய தூய கொள்கைகளின் உண்மையையும், மேன்மையையும் எடுத்துக் காட்டுகிறது. அத்தகைய பெரியாரின் உண்மை வாழ்க்கை நிகழ்ச்சிகளும் அன்னார் வசித்த காலமும் ஐயமற அறிந்துகொள்ளும் பாக்கியம் பெறாதவர்களாக நாம் இருக்கின்றோம். அன்னார் சரித்திரம் பரஞ்சோதியார் திருவிளையாடல், வேம்பத்தூரார் திருவிளையாடல், திருவாதவூரார் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், கடம்பவனப் புராணம், திருவுத்தரகோசமங்கைப் புராணம் முதலிய புராணங்களிலும், பயகரமாலை, சுந்தரப்பாண்டியம், கல்லாடம் முதலிய பிரபந்தங்களிலும் பலவித வேறுபாடுகளுடன் சொல்லப் பெற்றிருக்கின்றது. சமீப காலத்தில் புலவர் புராணம் முதலிய நூல்களில் எடுத்தாளப் பெற்றிருக்கின்றது. பலவித வரலாறுகளையும் எடுத்துக் கூறி அவைகளைப் பரிசோதித்துச் சமீப காலத்திற் பண்டிதர்கள் பல ஆராய்ச்சி உரைகளை அவர் பொருட்டு எழுதியிருக்கின்றார்கள்.

அவைகளைக் கொண்டு இன்னார் உரைதான் உண்மை எனக் கொள்ளல் சாத்தியமாக இல்லை. ஆகவே மாணிக்கவாசகப் பெருமானே அருளிய அவரது திருவாசகமே அவரது சரித்திரத்தைக் காட்டும் உண்மையான நூல் என்று நாம் கொள்ளல் வேண்டும். திருவாசகத்து வரலாற்றுக்குச் சற்று ஏறக்குறைய ஒத்து வருவது திருவாதவூரர் புராணம் என்றே சொல்லல் வேண்டும். இப் புராணங்கள் எல்லாம் மாணிக்கவாசகர் வாழ்ந்த காலத்திற்கு வெகு நூற்றாண்டுகளுக்குப் பிந்தி எழுதப் பெற்றவையாகையால் சரியான வரலாறுகளை அவைகள் கூற முடியா. நாள் ஆக ஆக உண்மைகள் மறைந்தும் கர்ண பரம்பரைகள் கலந்தும் கதை பெருகுவது வழக்கமல்லவா? மற்ற சமயாசாரியர்கள் சரிதங்களை எழுதியதுபோலச் சரித ஆராய்ச்சிவல்ல ஒரு சேக்கிழார் நமது மணிவாசகப்பெருமானுக்கு இல்லாமல் போனது நமது துர்ப்பாக்கியமே.

இது கிடக்க, அவரது காலத்தைப் பற்றியோ ஒருவரும் ஒரு திடமான கொள்கையைக் கூறுவார் இல்லை. மற்ற பெரியார்களைப்பற்றி ஒரு நூற்றாண்டு அளவிலாவது கால நிச்சயம் சொல்லக் கூடும்; ஆனால் உலகம் வியக்கவல்ல கனியெனும் பெருநூலை அருளின மாணிக்கவாசகனார் 10 நூற்றாண்டளவில் கூறப் பெறுகிறார். ஒரு புலவர்பெருமான் முதல் நூற்றாண்டு முதல் பதினோராம் நூற்றாண்டு வரை ஒவ்வொரு நூற்றாண்டிலும் வாழ்ந்தவர் என்று பல புலவர்கள் பலவித மேற்கோள்களைக் கொண்டு நிரூபித்தால் அவர் பெருமையும் நமது ஆராய்ச்சிச் சிறுமையும் எவ்வண்ணம் விளங்கும் பாருங்கள். முதல் நூற்றாண்டு முதல் பதினோராம் நூற்றாண்டு வரை சொல் நடை எவ்வளவு மாறிக்கிடக்கிறது என்பது அறிவோம். அப்படியிருந்தும் மணிவாசகருடைய காலத்தை நிச்சயமாக இந்த நூற்றாண்டு என்று நிர்ணயிக்க முடியாமல் இருக்கிறது. காலஅளவு விவகாரமானது சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டுக் கல்விமான்களை ஆட்டி அலைத்துக் கொண்டிருக்கிறது. தற்போது, மணிவாசகனார் மூவருக்கு முந்தியவரா பிந்தியவரா என்பது ஒரு பெரும் போராக விளைந்துகொண்டு



நிற்கிறது. இப்போது நடக்கும் விவகாரத்தைக் கவனித்தால் வேறு சான்றுகள் கிடைக்கு மட்டும் இப்போர் முடிவு பெறாது என்று நினைக்கவேண்டி யிருக்கிறது. ஆனால் கல்வெட்டுகளால் ஏதாவது சிறிது உதவி கிடைக்குமோ என்று ஆராய்ந்ததில், பலன் மிகக் குறைந்தே காண்கிறது. ஆனாலும் நாளதுவரை கிடைத்த கல்வெட்டுகளைத் திரட்டினால் ஒரு சிறிதாயினும் பயன் கிடைக்கலாம் என்ற எண்ணத்தினால் இங்கே அவைகளைத் திரட்டிக் காட்ட முயல்கிறேன். மாணிக்கவாசகரைப்பற்றிப் பதினோராம் நூற்றாண்டிற்கு முந்தி யாதொரு கல்வெட்டும் கிடைக்கவில்லை. கல்வெட்டுகளின் காலஅளவை, அவைகளில் கண்ட பொருள்கள், அவைகள் சொல்லப்படும் விதம் இவைகளைக் கொண்டு ஒருவித முடிவுக்கு வரக்கூடும் என்பது என் எண்ணம்.

மாணிக்கவாசகப் பெருமான் பாண்டிநாட்டில் வைகையாற்றங்கரையில் உள்ள திருவாதவூரில் அவதரித்தார். அவர் மறையோதும் அந்தணர் குலத்தில் பிறந்தவர். தாய் தந்தையர்கள் பெயர்கள் பழைய நூல்களில் புலப்படவில்லை. பிந்திய காலத்தில் அவர் தந்தை சம்புபாதாசிரியர் என்றும் தாய் சிவஞானவதியார் என்றும் கூறுவர். இச் சொற்கள் காரணப் பெயர்களேயன்றி இடுகுறிப் பெயர்களல்ல. அவரது பிள்ளைத் திருநாமம் திருவாதவூரர் என்பர். இதுவும் காரணப் பெயராக நிற்கிறது. பிந்தி வந்த மாணிக்கவாசகர் என்பதும் அவர் சொற்பெருமை பற்றியே வந்ததாகும். ஆகவே அவரது இயற் பெயர் நமக்குக் கிடைக்கவில்லை.

மாணிக்கவாசகர் பிள்ளைப் பிராயத்திலே தக்க கல்வி பயின்று நுண்ணறிவு படைத்துச் சிறந்த கல்வி வல்லாராக விளங்கினார். அவரது நுண்ணறிவு கண்டு அக்காலத்துப் பாண்டிய மன்னன் அவரை அழைத்து விருதுகள் வழங்கி அமைச்சராக அமைத்துக் கொண்டான். பழைய நூல்களில் அவ்வரசன் பெயர் குறிக்கப்படவில்லை. ஆனால் பின் வந்த திருவிளையாடலில் அரிமர்த்தனன் என்று கண்டிருக்கின்றது.

இக்காலத்து சிலர் வரகுணன் என்று கூறுகின்றனர். இதற்குத் திருக்கோவையாரில் வரகுணன் என்ற பதப்பிரயோகமே காரணம். திருவாசகத்தில் அரசன் பெயர் சொல்லப்படவில்லை. ஆனால் அவர் அமைச்சராயிருந்ததற்குக் குறிப்புகள் உள.

அமைச்சராயிருக்கும்போதே சமய விசாரணையில் ஈடுபட்டுச் சிவபெருமானிடம் அன்பு மிக்கு ஒரு மெய்க் குரவனைத் தேடி உய்யவேண்டுமென்ற ஆர்வம் கொண்டார். அதற்கு அனுகூலமாக ஒரு சம்பவமும் ஏற்பட்டது. சேனையில் குதிரைகள் குறையவே அவைகளை வாங்கவேண்டும் என்று எண்ணுகையில் கடலோரத்துத் துறைமுகத்தில் யவனர் குதிரைகளைக் கொண்டுவந்துளர் என்று கேள்வியுற்று, அரசன் மணிவாசகரை விளித்துப் பொருள் தந்து அனுப்பினன். மாணிக்கவாசகர் பொருள் பெற்று ஏகுகையில் திருபெருந்துறை அடைந்தனர். அங்கு ஒரு குருந்த மரத்தடியில் ஒரு பெரியார் தம் சீடர்கள் சூழ உபதேசம் செய்து வீற்றிருந்ததை நோக்கி, மனம் குழைந்து ஆனந்தபரவசராகி அவர் பாதம் பணிந்தனர். அவ்வாசிரியரால் எடுத்தாளப் பெற்று ஐந்தெழுத்துண்மை போதிக்கப் பெற்றார். அக்குரவனை ஈசனாகவே பாவித்து தாம் வந்த காரியத்தை மறந்து தொண்டு செய்து அவர் பாதத்திலே தாம் கொணர்ந்த பொருளை அர்ப்பணஞ்செய்தனர். ஆசிரியர் திருப்பணிக்குச் செலவிடச் சொல்ல அவ்விதமே ஆலயத் திருப்பணி செய்தனர். அதனைக் கண்டு மக்கள் அவரை உன்மத்தன், பித்தன் என்று ஏசினர். அதற்கவர் சிறிதேனுங் கவலவில்லை. அடிகள் கொண்டு சென்ற பொருளைக் குதிரை வாங்காது திருப்பணியில் செலவழித்த செய்தியைக் கேட்ட பாண்டியன் அவரை வரும்படி ஆக்ஞை இட்டனன். அவர் வரவே குதிரைகளைக் காணாது அவரைத் துன்புறுத்தினன். அவர் ஈசனைத் தொழ, ஈசன் அவர் வேண்டுகோட்கிணங்கி நரிகளைக் குதிரைகளாக்கி அரசனிடம் ஒப்புவித்தனன். மணிவாசகரும் துன்பம் நீங்கினர்.

ஆனால் அன்றிரவு குதிரைகளெல்லாம் மீண்டும் நரிகளாகி ஏற்கனவே சாலைகளில் இருந்த அரசனது குதிரைகளைக் கடித்



தும் வீடுகளில் புகுந்து மக்களை இம்சித்தும் காட்டிற்கு ஓடிவிட்டன. இம்மாயச் செய்தியைக் கண்ட அரசன் சீற்றம் கொண்டு மணிவாசகனாரை அழைப்பித்து அவரைத் தண்டித்தான். அவர் பொறுக்கமுடியாது ஈசனைத் தொழுதிறைஞ்சினார். ஈசன் அருள் புரிய எண்ணிப் பெருமழை பெய்வித்து வைகையில் வெள்ளப் பெருக்கெடுப்பித்து அதை மதுரை நகர் மேல் ஏவினார். அரசன் தன் நகரைப் பாதுகாப்பதற்கு எண்ணி ஊரார் இல்லம் தோறும் ஒவ்வொரு ஆளை வேலைக்கு அனுப்பும்படிப் பறையறைவித்துக் கரையைக் கட்டும்படி உத்தரவிட்டான்.

இப்படியிருக்க, மதுரையில் ஓர் ஏழைப் பிட்டுவாணிச்சி தனியாக வாழ்ந்து, ஈசன் மீது அன்பு மிக்கு இருந்தாள். அவளுடைய பங்கு வேலைசெய்ய ஆள் கிடைக்கவில்லை. அவ்விதம் கிடைக்காத குறையைக் கண்டு வருந்தி ஈசனைத் தொழவே ஈசன் மண்வேலை செய்யும் ஒரு கூலியாளாக வந்து அவளிடம் உதிர்ந்த பிட்டுகளைக் கூலியாகப்பெற ஒப்புக்கொண்டு வேலைக்குச் சென்றார். வேலை செய்யாமல் குலாவி ஆடிக்கொண்டிருக்கையில் கண்காணிக்க வந்த அரசன் அவ்வேலையாளைப் பிரம்பால் அடிக்க அவன் ஒரு கூடை மண் அள்ளிக் கொட்டவே உடைப்பு முழுதும் செம்மையாகிற்று. ஆளும் மறைந்தனன். அரசன் இவ்வற்புதச் செயலைக்கண்டு வியந்து தன் அறியாமையால் இவையெல்லாம் நிகழ்ந்தது எனத் தெரிந்து ஈசனை வணங்கி மாணிக்கவாசகரைச் சிறையினின்றும் விடுத்துத் தன்னை மன்னிக்கும்படி இறைஞ்சினன். மாணிக்கவாசகரும் தன் அமைச்ச கோலத்தைவிட்டு, துறவிக்கோலம் பூண்டு வெளிச் சென்றனர். திருப்பெருந்துறை சென்று தன் குரவனை மீண்டும் வணங்கி அடியார்களுடன் கூடச் சிலநாள் இருந்து பின் அவர்களைப் பிரிந்து அவர் ஆணையின்படி உத்தரகோசமங்கை, திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம் முதலான தலங்களைத் தரிசித்துப் பாடல்களை அருளி ஈசன் திருவடிகளை இறைஞ்சிச் சென்றார்.

அக்காலத்தில் தில்லையில் ஈழ நாட்டினின்று வந்த ஒரு புத்த குருவிடம் வாதாடி அவரை வென்று சைவ சமய உண்மை

களை நிலைநிறுத்தினர். பிறகு அத்தலத்திலேயே ஒரு பன்னசாலை கட்டி அதில் இருந்தனர். அக்காலத்தில் நடராசப் பெருமானைக் கண்குளிரக் கண்டு செந்தமிழ்ப் பாடல்கள் பல அருளிச் செய்தனர். ஒரு நாள் பெரியார் ஒருவர் தோன்றி மாணிக்க வாசகனர் பாடிய பாடல்களை எழுதிக்கொள்ளவேண்டும் என்று விண்ணப்பிக்க மணிவாசகனரும் அவைகளை அருள அப்பெரியாரும் எழுதிக்கொண்டனர். பின்பு ஈசன் மீது ஒரு கோவை பாடும்படி வேண்ட அவ்விதமே திருச்சிற்றம்பலக்கோவையையும் பாடி அருளினர். இவை யெல்லாம் எழுதிய பெரியார் உடனே மறைந்தருள ஈசனே இவ்விதம் வந்தருளினர் எனக் கண்டு வியந்தார். மறுநாள் அர்ச்சகர்கள் ஆலயத் திருக் கதவு திறக்கையில் அப்புதிய ஏடு இருக்க வியந்து பிரித்துப் பார்க்க அதில் “திருவாதவூரன் பாட அழகிய திருச்சிற்றம்பலமுடையான் எழுதியவை” என்றிருக்கக் கண்டனர். உடனே எல்லோரும் அடிகளிடம் சென்று அதன் பொருளை விளக்கும்படிக் கேட்க அவர் பொன்னம்பலத்தின் எதிரே புகல்வேம் எனக் கூறி எல்லாரையும் இட்டுச் சென்றனர். அங்கே “இத் தமிழ் மாலைக்குப் பொருள் இவரே” என்று ஈசனைச் சுட்டிக் காட்டி மன்றினில் புக்கு சிவச்சோதியில் மறைந்தனர். அதனைக் கண்ட எல்லோரும் ஆனந்த நீர் பொழிந்து அன்பினுல் உருகினர்கள். அப் பாடல்களே திருவாசகமும் திருக்கோவையாருமாகத் தமிழ் மறையில் ஓர் பாகமாக இப்போது இலங்குகின்றன.

மணிவாசகர் அமைச்சராக வாழ்கையில் இல்லறம் பூண்டு ஒரு கற்பிற் சிறந்த உத்தமியுடன் வாழ்ந்தனர் என்று அவர் அருளிய மாதர்களின் ஆடல் பாடல் பண்பு இவை கூறும் திருப்பாடல்களைக் கொண்டு திருமறைமலையடிகள் ஊகித்தெழுதுகின்றனர்.

மேலே கூறிய சரித்திரம் இக்காலத்து விஞ்ஞானம் அறிந்த மக்கள் எளிதில் நம்பக்கூடாத பல அருஞ் செயல்களைக் கொண்டிருந்தபோதிலும் அவைகளுக்கு மணிவாசகனர் திருப்பாடல்களிலேயே சான்றுகள் இருத்தல் கண்டுகொள்க.



ஆசாரிய மூர்த்திகள் வேதியராக வந்து ஆண்டமையை

“அந்தணராகி யாண்டு கொண்டருளி
இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்”

எனவும், குருநாதனுல் தொடர்பு நீக்கப் பெற்றதை,

“சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே”

எனவும், ஈசன் குதிரைச் சேவகனுய் வந்ததை,

“பள்ளிச்குப் பாயத்தர் பாய்பரிமேல் கொண்டென்
உள்ளங் கவர் வரால்”

எனவும், நரியைப் பரியாக்கியதை,

“நரிக ளெல்லாம் பெருங்குதிரை யாக்கியவா
றன்றேயுன் பேரருளே”

எனவும், பிட்டுக்காக மண் சுமந்ததை,

“பிட்டுநேர்பட மண் சுமந்த
பெருந்துறைப் பித்தனே”

எனவும், மண் சுமந்தபோது அடி பட்டதை,

“மண்சுமந்து கூலிகொண்டு அக்கோலான் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானுய்”

எனவும், தில்லைக்கு வரச் சொன்னதை,

“நாயினேனை நலமலி தில்லையுட்
கோலமார் தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங் கொழித் தருளி”

எனவும் ஆசிரியர் சரித்திர பாகங்கள் காட்டும் சொற்கள் அவரது பாடல்களிலிருந்தே பெறக்கிடக்கின்றன.

## II

தேவாரம் அருளின மூவர் காலத்து அரசர்களின் பெயர்களை ஆராய்ந்து அறிவதற்கு அவர்கள் சொன்ன பாடல்களிலிருந்தும், அவர்கள் காலத்து வாழ்ந்த ஏனைய பெரியார்களின் பெயர்களிலிருந்தும் அவர்களுடைய சீவிய சரித்திரத்தைப் பலருக்கு ஊட்டிய சேக்கிழார் மொழிகளிலிருந்தும் வேண்டிய

ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால் மாணிக்கவாசகர் காலத்து அரசர்களின் பெயர்களை நிச்சயமாகச் சொல்வதற்கு அவருடைய பாடல்களாவது அவற்றைப்பற்றிக் கூறும் இதர கவிஞர்களாவது எவ்வித ஆதாரங்களையும் குறிக்கவில்லை. மாணிக்கவாசகர் தென்னவன் என்று மாத்திரம் அங்கங்கே குறிக்கின்றார். ஏனைய அரசர்கள் பெயர்களையே காணேம். ஆனால் திருக்கோவையாரில் மட்டும் "வரகுணனும் தென்னவன்" என்று இரண்டு செய்யுட்களில் வரகுணனைக் குறிக்கின்றார். இந்த வரகுணன் எவன் என்ற விவாதம் தீர்க்கமுடியாமல் கிடக்கின்றது. பெரும்பான்மை சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கி. பி. 862-ல் இருந்த வரகுணன் என்பார்கள். ஆனால் இதை நிச்சயமாக நிரூபிக்க மேல்சான்றுகள் கிடையா. (Mythic Journal-ல் திரு. K. G. சங்கரையர் திருக்கோவையார் வரகுணன் 862-ம் ஆண்டு வரகுணன் அல்லன் என்பர். XXII p. 50)

மேலும், சம்பந்தரும் அப்பரும் சிறுத்தொண்ட நாயனார், கோச்செங்கணான், கண்ணப்பர் முதலான அடியார்கள் பெயர்களையும், சுந்தரர், சம்பந்தர், அப்பர் முதலிய தமக்கு முந்திய அடியார்கள் பெயர்களையும், நரசிங்க முனையர், ஏயர்கோன் கலிக்காமர், சேரமான் பெருமாள் முதலான தம் காலத்துப் பெரியார்களின் பெயர்களையும் குறித்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் காலம் எளிதில் ஆராயமுடியும். ஆனால் மாணிக்கவாசகரோ அவ்விதம் முன்னோர்களையாவது தம் காலத்துப் பெரியார்களையாவது கூறவில்லை. உலக விவகாரத்தை விட்டு எப்போதும் ஈசன் பாதத்தையே எண்ணிக் கொண்டிருந்தவராதலால் ஏனையோர் பெயர்களைக் குறித்திலர் போலும்.

தேவாரம் பாடிய மூவரின் பெயர்களை அவர்களின் சமீப காலத்துப் புலவர்கள் குறித்துள்ளார்கள். திருவிசைப்பா ஆசிரியர்களும் நம்பி யாண்டாரும் மூவர்களுடைய பெயர்களைக் குறித்துள்ளார்கள். ஆனால் மாணிக்கவாசகர் பெயரை அவ்விதம் குறிக்கவில்லை. 862-ல் மாணிக்கவாசகர் இருந்தவர் என்று கொள்ளினுங்கூட ஏன் அவர்பெயர் குறிக்கப்பெறவில்லை? அடிகள் எவராலும் அறிந்து கொள்ளக் கூடாத முற்றும் துறந்த முனிவராகத் திகழ்ந்ததினாலோ அல்லது வேறு எந்த காரணத்தினாலோ தெரியவில்லை. ஆனால் அவரைப்போலேவே முற்றும் துறந்த ஞான வள்ளலான பட்டினத்தடிகளே அவரை முதன் முதலில் "திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்" எனக் குறித்தவராவர்.



இவ்விதம் பெரும்புலவர்களாலேயே குறிக்கப்படாத பெருமை வாய்ந்திருப்பின் அரசர்களாலும் குறிக்கப் பெறும் இயல்பு அவரை எட்டுமா? சோழ ஆதிக்க காலத்தில் இராசராசச் சோழரும் அவர் மகன் இராசேந்திரச் சோழரும் மூவர் உருவங்களைத் தாங்கள் கட்டி நிலைநிறுத்தின தஞ்சைக் கோயிலில் தாபித்துப் பல தானங்கள் விட்டனர். ஆனால் அவ்வுருவங்களிலே மாணிக்க வாசகர் உருவம் வைக்கப்படவில்லை. அக்காலத்தில் வேறு கோயில்களிலும் கூட அவர் சிலை வைக்கப்பெறவில்லை. மூவர்களைப்போல இவர் பெயர் உலகத்தில் அக்காலத்தில் பிரசித்தி பெறவில்லை போலும். முதல் முதலாக வீரராஜேந்திரன் காலத்தில் தான் இவரது பெயர் கல்வெட்டில் புகுந்தது எனப் பின் சொல்லும் ஆராய்ச்சியினால் தெரியவரும். இவ்விதம் இல்லாமற் போனதற்குக் காரணம் தெரியவில்லை.

நமது அடிகளின் பெயரும் அவரது பாடல்களை ஓதுதல் முதலியவைகளும் பதினோராம் நூற்றாண்டுவரைக் கல்வெட்டுகளில் பதியப்படாதது போலவே அவரது சிலைகளும் ஆலயங்களில் வெகு காலம் வரைக்கும் பிரதிஷ்டை பெறாமல் இருந்தன. குலோத்துங்க சோழன் III. (1178—1216) கட்டிய தாராசுரம் என்ற ஆலயத்தில் சிவனடியார்கள் உருவங்களும் செயல்களும் கல்லில் செதுக்கப் பெற்றிருக்கின்றன. இவைகள் திருத்தொண்டத் தொகையில் உள்ளவாறு இருக்கின்றன. இவை மிகப் பழையவையெனக் கூறலாம். இவ்வுருவங்களில் மாணிக்கவாசகர் உருவமாவது அவர் செய்கையாவது கிடையா. ஆகவே இதற்குப் பின்பு தான் ஆலயங்களில் மாணிக்கவாசகரையும் மூவரோடு நால்வராகச் சேர்த்துவைத்தல் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

மேலும் தாராசுரத்து அடியார் உருவங்களுள் 'பொய்யடிமையில்லாப்புலவர்' உருவமும் உண்டு. நம்பியாண்டாரும் சேக்கிழாரும் கூறுவதுபோல இவ்வுருவமும் சங்கப்புலவரையே ஒத்திருக்கிறது. இப்போது சில ஆராய்ச்சியாளர்கள் மாணிக்கவாசகரைப் பொய்யடிமை யில்லாப்புலவர் என்று சுந்தரர் குறித்திருக்க வேண்டும் என்ற கொள்கை சோழர் காலத்திலேயே இல்லாமல் இருந்தது என்னலாம்.

## III

இனி, மாணிக்கவாசகரைப்பற்றிக் கிடைத்த கல்வெட்டுகளிலிருந்து அவரைப்பற்றிக் கூறும் பொருள்களை எடுத்துத் தொகுத்துக் கூறுவோம்.

### i. நாயனுர் பெயர்கள்

அடியிற் காணும் பெயர்களைக் கல்வெட்டுகளால் அறியலாம்:—

(1) திருவாத வூரடிகள்:—தஞ்சை (213) திருவலஞ்சுழி—இவ்வாலயத்தில் திருநாவுக்கரசர், திருக்கண்ணப்ப தேவர் இவர்கள் பதுமைகளோடு திருவாதவூரடிகள் விக்கிரகமும் கூறப்பெற்றுள்ளது. கி. பி. 1158.

(2) திருவாதவூராளி நாயனுர்:-தஞ்சை (709)—வழுவூர். கி. பி. 1167.

(3) திருவாதவூர்த் தேவர்:—தஞ்சை (850)—திருவீழிமிழலை. கி. பி. 1226:

(4) மாணிக்க வாசகர்:—
- i. தஞ்சை (850) திருவீழிமிழலை. கி. பி. 1226
- ii. செங்—(976) திருவொற்றியூர். கி. பி. 1024

(5) திருவாதவூர் நாயனுர்:—
- i. 80-16 கி. பி. 1305
- ii. 285-27 மருதநல்லூர். கி. பி. 1148

(6) வாதவூர் நாயனுர்:—தஞ்சை (708) வழுவூர். கி. பி. 1181

(7) திருவாதவூர் பிரமராயன்:—கி. பி. 1390



இக்கல்வெட்டில் ஒருவன் தன் பெயரில் திருவாதவூர், பிரமராயன் என்ற இரண்டு மொழிகளை ஏனைய மொழிகளுடன் சேர்த்து வைத்திருப்பதை நோக்கினுல் இவ்விரண்டு பெயர்களும் நாயனுர்க்கு இருந்ததை ஊகிக்க முடியும். ஆகவே மேற்காட்டிய கல்வெட்டுகளிலிருந்து நமது ஆசாரியருடைய சரித்திரத்தில் நமக்கு கிடைக்கக் கூடிய அவர் திருநாமங்கள் பலவும் போற்றப் பெற்றிருக்கும் நிலையை அறிகிறோம். அவர் அவதரித்த ஊரான திருவாதவூரையே தமது பிள்ளைத் திருநாமமாக வைத்திருந்ததை "திருவாத வூரடிகள்" என்ற பெயரினுலும் அப்பெயரின் திரிபுகளான "திருவாதவூராளி நாயனுர்" "திருவாதவூர்த் தேவர்" "திருவாதவூர் நாயனுர்" "வாதவூர் நாயனுர்" என்ற பெயர்களினுலும் அறியலாம். மேலும், அரசனிடம் அமைச்சராய் அமைந்தபோது "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டம் பெற்றதும், கி. பி. 1390-ல் வேறொரு பக்தன் தான் "திருவாதவூர் பொன்மேய்ந்த சோழப் பிரமராயன்" என்ற சிறப்பு பெயருடன் விளங்கினதிலிருந்து அக்காலத்திலேயே நமது ஆசாரியருக்கு "பிரமராயர்" என்ற பட்டம் இருந்த செய்தி உலகப்பிரசித்தி பெற்றிருந்ததென ஊகிக்கலாம். பிற்காலத்தில் ஆசாரியர் திருவாசகம் பொழிந்த காலைச் சிவபெருமானுரால் அருளிக் கொடுக்கப்பட்ட "மாணிக்க வாசகர்" என்ற திவ்விய நாமமும் இரண்டு கல்வெட்டுகளால் ஆதரிக்கப்பெற் றிருக்கின்றது. ஆகவே 11-ம் நூற்றுண்டு முதல் 14-ம் நூற்றுண்டு வரை அவர் திருநாமங்கள் வழங்கி வந்த செய்தி இக்கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றது.

### ii. நாயனுர் விக்கிரகங்களும் அவைகளின் தாபனங்களும்

நமது ஆசாரியரின் உருவத்தாபனங்கள் அடியிற்கண்ட ஆலயங்களில் கூறப் பெற்றிருக்கின்றன.

(1) மருதநல்லூர் (தஞ்சை, கும்பகோணம் தாலூக்கா 285-1927) சிவாலயத்து முன் மண்டபத்து வடச்சுவர். இராஜராஜச் சோழன் 2-ம் ஆண்டு-கி. பி. 23-2-1148-குலோத்துங்கச் சோழவள நாட்டுத் திருநறையூர் நாட்டுத் திருக்கருக்குடி விழு

ழிய நாயனார் ஆலயத்தில் தான் தாபித்த திருவாதவூர் நாயனார் மூர்த்திக்கு ஆராதனைக்காகச் சென்னிமங்கலத்து விசுவேசுவர ஆலயத்துத் தேவதாசியான கரையேற விட்டாள் திருநட்டப் பெருமாள் என்பவள் நிலதானம் செய்தது.

(2) திருவலஞ்சுழி:—(தஞ்சை 218) கபர்தீசுவரர் ஆலயம் முன்மண்டபத் தென்சுவர். இராஜராஜ தேவச் சோழன் II-12-ம்—ஆண்டு 26-3-1158—இக்கல்வெட்டில் திருநாவுக்கரசு தேவர், திருவாத வூரடிகள் திருக்கண்ணப்ப தேவர் இவ்விக்கிரகங்களின் ஆராதனைக்காக பூதானம் செய்தது கண்டிருக்கிறது.

(3) வழுவூர்:—(தஞ்சை 709) வீரட்டானேசுவரர் ஆலயம் முன்மண்டபத்துத் தென்சுவர். சோழன் இராஜாதிராஜ தேவன் II—5-ம் ஆண்டு—1-7-1167 ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் திருவாதவூராளி நாயனார் விக்கிரகத்தின் சந்நிதியில் மார்கழி மாதம் திருவாதிரை நாளில் திருவெம்பாவை ஓதுவதற்கும் பங்குனித் திருவிழா நடத்துவற்குமாக ஒரு அன்பன் பணம் தானம் செய்தது.

(4) வழுவூர்:—(தஞ்சை 708) அதே ஆலயம் அதே சுவர் குலோத்துங்கச் சோழன் III—3-ம் ஆண்டு அதாவது கி. பி. 1181—மேல் கல்வெட்டில் கூறிய அன்பனே திருவீரட்டானமுடையார் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் வாதவூர் நாயனார் ஆராதனைக்காக ஒரு நிலத்தை வாங்கி அளித்தது.

(5) திருவீழிமிழலை:—(தஞ்சை 850) வீழிநாத சுவாமி ஆலயம் முதல் பிரகாரத்துத் தென்சுவர். இராஜராஜ தேவன் III-11-ம் ஆண்டு-அதாவது 30-11-1226-திருவீழிமிழலை மூன்றும் பிரகாரத்தில் எழுந்தருளி இருக்கும் திருவாதவூர்த் தேவர் மாணிக்கவாசகருடைய விக்கிரகத்திற்கு ஆராதனைக்காக பூதானம் செய்தது,

(6) சன்னவனம்:—(இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூக்கா—30-1916) சால்யவனேசுவரர் ஆலயம் முன்மண்டபத்துத் தென்சுவர். சகல நாடும் வென்ற மாறவர்மன் குல



சேகரபாண்டியன் 33-ம் ஆண்டு—கி. பி. 1305-இக்கல்வெட்டில் சுந்தர பாண்டிய பட்டன் என்பவன் அவ்வூராலயத்தில் தாபித்த திருவாதவூர் நாயனார் விக்கிரகத்திற்கு ஆராதனைக்காக வியாதரையன் கோட்டை வாசிகள் பூதானம் செய்தது குறிக்கப் பெற்றிருக்கிறது.

ஆகவே சோழ நாடாகிய தஞ்சை ஜில்லாவில் 4 ஆலயங்களிலும் பாண்டிய நாடான இராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு ஆலயத்திலும் மாணிக்க வாசகருடைய உருவம் தாபிக்கப் பெற்று ஆராதனையும் செய்யப் பெற்று வந்ததை மேற்சொல்லிய 5 கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். அவைகளும் முறையே 1148 முதல் 1305 வரைக்குள் தானசாசனங்களால் ஆதரிக்கப் பெற்றன என்றும் அறிகிறோம். ஆனால் வாதவூரடிகள் அவதாரத்தலமாகிய திருவாதவூரில் அவரது ஆலயம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வூரில் நாளிதுவரை கிடைத்த இரண்டு கல்வெட்டுகளும் சமீப காலத்தவை; அவைகளில் அடிகளைப்பற்றி ஒன்றுங் கிடையாது. மேலும் அடிகள் அதிக காலம் வாழ்ந்து அற்புதங்கள் விளைவித்த மதுரையிலும் அவரது தாபிதத்தைப்பற்றிக் கல்வெட்டுகள் கூறவில்லை. அவரது வேறு திருவருட் செயல்களைக் கூறுவதும் கிடையா; காரணம் தெரியவில்லை. நமது ஆசாரியர் ஞானோபதேசம் பெற்று, பாண்டியனது பெரும் பொருள் செலவழித்து ஆலயம் எழுப்பின திருப்பெருந்துறையான ஆவுடையார் கோயில் சாசனங்களிலும் நம் ஆசாரியரைப்பற்றிக் கல்வெட்டுகள் கிடையா. ஆனால், தற்காலத்தில் ஆவுடையார் கோயிலிலே மாணிக்க வாசகருக்குத் தனி ஆலயமும் திருவிழாக்களில் அவரது உருவத்திற்குப் பெரும் சிறப்பும் ஏற்பட்டிருப்பது சகலரும் அறிந்த செய்தியாகும். திருவதிகையில் அப்பருக்கும், சீகாழியில் சம்பந்தருக்கும், திருவெண்ணெய் நல்லூரில் சுந்தரருக்கும் தனி ஆலயங்களும் தனிச் சிறப்புகளும் ஏற்பட்டிருப்பதைப் போன்று நமது மணிவாசகப் பெருமானுக்கும் ஆவுடையார் கோயிலில் சிறப்பு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அது எக்காலத்தில் ஏற்பட்டது என்பதற்குப் போதிய சான்று இல்லை. ஏனைய அவதாரத் தலங்களைப்

போல் அல்லாமல் இவ்வாலயத்தில் ஒரு சிறந்த மாறுபாடு உண்டு. மற்ற ஆலயங்களில் சமயாசாரியர்களுக்குத் திருவிழாக்களில் அதிகச் சிறப்பு இருந்தாலும் ஆலயத்துப் பெருமானுக்கும் சிறப்பாக திருவிழா நடத்துவார்கள். ஆனால் அவ்விதம் ஆவுடையார் கோயிலில் இல்லை. இதற்கு காரணம் என்னவோ?

ஆவுடையார் கோயிலில் தற்போது உள்ள பெரும் ஆலயமான ஆத்மநாத சுவாமி ஆலயம்தான் மாணிக்க வாசகர் நிருமாணித்தது என்று தற்காலத்தில் நம்பப்பட்டு வருகின்றது. ஆனால் அதை நிரூபிக்க அந்த ஆலயத்தில் யாதொரு கல்வெட்டுச் சான்றும் கிடையாது. பழைய ஆலயமானது பிற்காலத்தில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பெற்று முந்தி இருந்த சகல சின்னங்களும் அழிக்கப்பட்டன போலும். ஏனெனில் தற்போது ஆலயத்தில் காணும் கல்வெட்டுகள் எல்லாம் 15, 16-ம் நூற்றாண்டின் அளவே இருக்கின்றன. அவைகளிலும் இவ்வூருக்குத் திருப்பெருந்துறை என்பது பெயர் என்ற ஒரு முக்கியமான செய்தியைத் தவிர மாணிக்கவாசகரைப் பற்றிய வேறு செய்திகளைக் கூறவில்லை. இக்கல்வெட்டுகளினாலே 15--ம் நூற்றாண்டிலிருந்தாவது இத்தலம் திருப்பெருந்துறை என்று வழங்கப்பெற்று வந்ததை அறியலாகும். சிலர் இத்தலம் பெருந்துறை அன்று அது மேற்கே மலை நாட்டில் உள்ளது என்பதை இக்கல்வெட்டுகள் மறுக்கின்றன. ஆனால் 15-ம் நூற்றாண்டிற்கு முந்திய சான்றுகள் நமக்கு கிடைக்கவில்லை.

இது கிடக்க, இவ்வாலாயத்தில் வேறு மாறுபாடுகளும் உண்டு. கோயில் தெற்குப் பார்த்த சந்நிதி. மணிவாசகருக்கு உபதேசித்த வண்ணம் எழுந்தருளினதினாலே இவ்விதம் இருக்கலாம். குருந்த மரத்தடியில் உபதேசம் செய்த உருவம் ஆலயத்தின் பிற்பிரகாரத்தில் இருக்கிறது. மூலஸ்தானத்து இலிங்கமும் அம்மன் உருவமும் இல்லை. ஆகமப்படி நடத்த வேண்டிய ஆராதனை பீடங்களாகிய ஆவுடையார்களுக்கே நடந்து வருகின்றது. பரிவார தேவதைகளாகிய நந்தி, சண்டிகேசர் இவர்கள் இல்லை. விநாயகரும் சுப்பிரமணியரும் கடைசிப் பிரகாரத்தின்



கோபுரத்தில் எழுந்தருளி இருக்கிறார்கள். இவ்வித மாறுபாடுகளுக்குக் காரணம் தெரியவில்லை. ஒரே தனி முதற் கடவுளைப் போற்றுபவராதலினால் மாணிக்க வாசகர் இவ்விதமாக ஆலயத்தை நிருமாணித்தனரோ என்று சிலர் ஊகிக்கின்றனர்.

இவ்வாலயத்துப் பிரகாரத்திலே மேல் புறத்தில் அகோர வீரபத்திரர் உருவம் இருக்கின்றது. இதன் எதிரில் பேய் பிடித்த மக்கள் பேயாடுவது ஒரு விசேஷமாக இருக்கின்றது. ஏனைய சிவாலயங்களில் இந்நிகழ்ச்சியைக் காண்பதரிது. சைவ சமயாபிவிருத்தி ஏற்பட்டதற்கு முந்தி இருந்த பண்டைய சிறு தேவதைகளின் ஆராதனை இவ்விடத்தில் மிகுந்து எஞ்சி நின்றது போலும்.

மேலும், இவ்வூரில் ஆதி கைலாயநாத சுவாமி ஆலயம் என்ற ஒரு புராதன கோயில் உண்டு. ஒரு சிலர் இவ்வாலயத்தைத்தான் மாணிக்கவாசகர் வழிபட்டது என்பார்கள். அதற்கு ஆதாரமாக செத்திலாப்பத்தில் "கயிலைமலை மேவிய கடல்" என்று சிவபிரானைப் பாடியுள்ளதைக் குறிப்பிடுவார்கள்.

இனி, இவ்வூர் ஆலயத்தில் ஆவுடையாரே பிரதான மூர்த்தியாக உள்ளதால் இவ்வூருக்கே ஆவுடையார் கோயில் என்ற பெயர் வழங்கி வந்தது போலும். ஆனால் கல்வெட்டுச் சான்று வேறு விதமாக இருக்கின்றது. இவ்வாலயத்து சகம் 1521 சார்வரி புட்டாசி 20-ந் தேதியிட்ட (502-25) கல்வெட்டில் திருப்பெருந்துறை ஆளுடைய பரம சுவாமிகள் என்று பெயர் கண்டிருக்கின்றது. இதைக் கொண்டு ஆளுடையார் கோயில் என்ற பதமே ஆவுடையார் கோயில் என்று மருவி இருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு. மேலும் 1524 சகம் சுபகிருது பங்குனி 22-ந் தேதியிட்ட ஒரு கல்வெட்டிலும் ஆதி கைலாயநாதர் கோயில் சாசனம் ஒன்றிலும் திருப்பெருந்துறைக்குப் பவித்திர மாணிக்கச் சதுர்வேதி மங்கலம் என்று பேர் உண்டென்று குறிக்கப்பட்டுள்ளது. இப்பெயரில் மாணிக்க சப்தம் இருப்பது அறியத்தக்கது. இதனால் மாணிக்க வாசகர் சம்பந்தம் அறியக் கிடக்கின்றதோ என ஆராயலாகும். சகம் 1524-ம் ஆண்டுக் கல்வெட்டுகளில் (503—507/25) அக்காலத்தில் இவ்

வாலயத்தின் திருப்பணிக் கர்த்தாவாக ஒரு பரதேசி முத்திரை வாமதேவ பண்டாரம் என்ற ஒருவர் இருந்தார் என்றும், அவர் திருப்பணி செய்தும் குருபூஜை செய்வித்தும் அவைகளுக்காக தானங்கள் பெற்றும் அவ்வாலயத்தின் திருமலைக் கொழுந்து பிள்ளை மூர்த்தத்தின் மஞ்சனத்திற்குத் தானம் செய்தும் வந்தார் என்றும் அறிகிறோம். மேலும் 1589 சகம் ஆண்டுக் கல்வெட்டினால் இக்கோயிலில் ஒரு மண்டபத்திற்கு ஆபத்சகாய பேரம்பலம் என்ற பெயரிருந்ததாகவும் அறிகிறோம். இவ்வூரில் உள்ள ஆதி கைலாய நாதர் ஆலயத்தில் திரிபுவன வீரசோழன் 34-ம் ஆண்டுக் கல்வெட்டிலும், கஜேந்திரப் பெருமாள் ஆலயத்து 1308 சகம் ஆண்டுக் கல்வெட்டிலும் திருப்பெருந்துறை என்ற நாமம் குறிக்கப்பெற்றுள்ளது. இவ்விஷ்ணு ஆலயத்தில் 12-ம் நூற்றாண்டுச் சாசனம் ஒன்றும் இருக்கின்றது.

(தொடரும்)

---

# பண்டைத் தமிழ்ச் சொற்கள்

## அடிகள் (௧௭)

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள்.]

(௨௧௰-ம் பக்கத் தொடர்ச்சி)

(8) 'ஆண்டான் அடிமைத் தொடர்பு' என்பது சைவ சமயத்திற்குரிய ஒரு சிறந்த உண்மை. அந்த உண்மையில் கடவுள், ஆண்டவன் (தலைவன்) என்றும், உயிர்கள் அவனுடைய அடிமைகள் என்றும், இருவேறு அறிவுப் பொருள்களுக்குமுள்ள தொடர்பு அத்துவிதத் தொடர்பு என்றும், சைவநூல்கள் கூறுகின்றன. உடலுறுப்புகளில் தலை எல்லா உறுப்புகளுக்கும் மேலாயிருப்பதாலும், தூல உடலில் தலையிலுள்ள மூளையே அறிவுக் கருவியாயிருத்தலாலும், அச்சொல்லுடன் பண்பு விகுதி 'மை' சேர்ந்த தலைமை என்பது அறிவால் ஆளும் முதன்மையைக் குறிக்கிறது. அடி, உடலுறுப்புக்களெல்லாவற்றிற்கும் கீழாயிருந்தலினாலும், உடலை இடம் விட்டு இடம் பெயர்த்தற் கருவியாயிருத்தலினாலும், அச்சொல்லுடன் மை என்ற பண்பு விகுதி சேர்ந்த அடிமை என்ற சொல் அறிவால் ஆளுந் தலைவனுக்குள் அடங்கி ஒழுகிப் பணிசெய்யும் பணியாளைக் குறிக்கின்றது. இங்கே அடிமை என்ற சொல், தன்னலத்தின் பொருட்டுத் தலைவன் செய்யும் ஆளுகையை அறிந்து சுதந்தரத்துடன் அதற்குத்தக ஒழுகும் பணியாளன் என்று பொருள்படும். தலைவன் நலத்துக்காகவே யாதொரு சுதந்தரமுமின்றி அவனிட்ட பணியைச்செய்யும் பணியாளன் (Slaves) என்ற மேற்கு நாட்டுக் கருத்தை அதில் ஏற்றுதல் கூடாது. கடவுளுக்குப் பொதுவாக மக்களெல்லாரும் மேலே சொன்ன கருத்தில் அடிமைகளா யிருந்தாலும், ஆண்டவனாகிய கடவுள் தங்களை ஆளுந் தன்மையையும், தாங்கள் அவனுக்கு அடிமைகளாக அடங்கி நடக்கும் அடிமைத் தன்மையையும் உள்ளபடி அறிந்து உணர்ந்து ஒழுகுகிற மக்களே, கடவுளுக்குச் சிறப்பாக அடியார் என்று கூறப்படுவார்கள். வேறு ஒரு பொருளையும் பற்றாது கடவுளது அருளையே பற்றாகக்கொண்டு, யான் எனது என்னும் செருக்கின்றித் தாங்கள் செய்யும் பணியெல்லாம் இறைபணியாகச் செய்யவல்ல தகைமை யுடையவர்கள் அடியார்களாவார்கள். இந்த அடியார் என்ற சொல்லினும் அடி என்பது அருளைக் குறித்தல் காண்க. இக்காலத்து, 'அடியார்' என்ற சொல் திருநீறு அக்குமணி முதலிய சிவவேடம் பூண்டவர்களைக் குறிக்க உபசாரமாய் வழங்கப்படுகின்றது.

9. ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மை பற்றியே, குருவானவன் ஒரு மாணவனுக்குத் தீக்கை செய்யுங்கால், தான் கடவுளால் அதிட்டிக்கப் பட்டவன் என்ற நிலையில் மாணவன் தலையில் தனது திருவடிகளைச் சூட்டி, அவனைத் தன்னுடைய அடிமையாகச் செய்துகொள்கிறான். திருவடி சூட்டலானது திருவருளிற் கலத்தலைக் குறிக்கின்றது. திருநாவுக்கரசு சுவாமிகள் "பிரானடி யென்மேல்வைத்தாய் நீயே" என்று கூறியிருத்தல் காண்க.

10. இக்காலத்து, உலக வழக்கிலும் இழிந்தோனொருவன் உயர்ந்தோனொருவனை நோக்கி "உமது அடிக்கு எனது

தலையால் தாழ்ந்த வணக்கம் செய்கிறேன்" என்றும் "உமது அடிக்கு உரைக்கிறேன்" என்றும் "உமது அடி என் தலைமேலே" என்றும் "உமது அடிமை" அல்லது "அடியான்" என்றும் "அடியேன்" என்றும் கூறுதலை நாம் காண்கின்றோம். இந்த வசனங்களில் இழிந்தோன் உயர்ந்தோனுக்கு அடங்கி ஒழுகலும் அவன் அருளை அல்லது தயவைப் பெறுதலும் குறிக்கப்படுகின்றன. வணங்குகிறவன் தலையும் வணங்கப்படுகிறவன் அடியும் முறையே தாழ்மையையும் உயர்வையுங் குறிக்கின்றன. "தாளை வணங்காத் தலை" என்று திருவள்ளுவர் கூறியிருத்தல் காண்க. உயர்வானது உண்மையில் அன்பு அறிவு செயல் வகைகளாற் கருதப்பட்டால் மட்டுமே உயர்ந்தவனிடத்துச் செய்யும் பணிவு உண்மையாக இருக்கும். செல்வம் அதிகார முதலிய உலக நலங்கள்பற்றி ஒருவனுக்கு உயர்வு உளதாகக் கருதி இழிந்தோனாற் செய்யப்படும் பணியானது உண்மையாக இராமல் நடிப்பாயிருக்கும். நமது இந்திய நாட்டில் வெறும் பிறப்புப்பற்றியும் வணக்கம் செய்யப்படுகின்றது. பணிவு (Humility) உண்மையாக இருந்தாலொழிய பணிவு செய்கிற இழிந்தோனுக்கும் பணிவைப்பெறுகிற உயர்ந்தோனுக்கும் யாதொரு நலமும் உண்டாகா திருத்தலுடன் தீய பண்பும் வளரும். இக்காலத்துப் பெரும்பாலும் மக்கள் செய்யும் வணக்கமும் பணிவும் அவர்களது உள்ளத்தோடொன்றியவைகளாயிராமல் உரை செயல் வகைகளாகவே காணப்படுகின்றன.

(தொடரும்)

---

# திருநெல்வேலி
# தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்
## நிறைவேற்றற் கழகத்தாரால் செய்யப் பெற்ற தீர்மானம்

சந்திரன், செவ்வாய் முதலிய கோள் (கிரகங்)களுக்கெல்லாம் பிறப்பிடமாகவும் அரசாகவும் விளங்குகின்ற சூரியனை வைத்து ஆண்டு, மாதம் முதலியவைகளைக் கணிப்பதே சௌரமானம். நிலை



யான ஒளியையுடையதாகிய சூரியனிடமிருந்து தோன்றிய பூமியிலிருந்து தெறித்து மிகச் சிறிய உருவுடையதாய்ச் சூரியனைக் காட்டிலும் பலகோடிப் பங்கு சிறியதாய் சூரியனுடைய ஒளியால் விளக்கமுறுவதேயன்றித் தனக்கெனவுள்ள ஒளியற்றதாய்ப் பூமியையும் சூரியனையும் சுற்றிச்சுற்றி வலம்வருவதாய் வளர்ச்சி தளர்ச்சிகளையுடையதாயுள்ள சந்திரனுடைய வளர்ச்சி தளர்ச்சியை வைத்து நாட்களை எண்ணுவது சாந்திரமானம். சௌரமான ஆண்டு சித்திரை மாதத்தில் தொடங்கி பன்னிரண்டு மாதங்களை உடையது. சாந்திரமான ஆண்டு பங்குனி மாதத்தில் வரும் அமாவாசைக்கு மறுநாள் தொடங்குகிறது. சாந்திரமான மாதம் அமாவாசை கழிந்த மறுநாள் பிரதமை முதல் தொடங்கி மறு அமாவாசை முடிய உள்ள காலம். சௌரமான மாதமென்பது சூரியன் பன்னிரண்டு இராசிகளில் ஒவ்வொரு இராசியிலும் இருக்கும் காலமாகிய சித்திரை முதலிய மாதங்கள். சாந்திரமாதங்களின் பெயர்கள் சைத்திரம், வைகாசம் முதலியன. சாந்திரமாதப் பெயர்கள் சித்திரை, வைகாசி முதலிய சௌரமாதப் பெயர்களின் திரிபுகளே.

சாந்திரமானிகளாகிய ஸ்மார்த்தப் பிராமணர்கள் சௌரமாதங்களோடு சாந்திர மாதங்களை இணைத்தே வழங்கிவருகின்றார்கள். சௌரமான ஆண்டு சுமார் 365¼ நாட்களையுடையது. சாந்திரமான ஆண்டு சுமார் 354 நாட்களை யுடையது. இதனால் சௌரமானப்படி சுமார் இரண்டு வருடம் எட்டு மாதங்கள் (அதாவது 32 மாதங்கள்) ஆகும்போது சாந்திரமானப்படி ஒரு மாதம் அதாவது முப்பது நாட்கள் அதிகப்படும். அதாவது அந்தச் சாந்திர வருடத்தில் 13 அமாவாசைகள் வரும். அதில் ஒரே சௌர மாதத்தில் முதலிலும் கடைசியிலுமாக இரண்டு அமாவாசைகள் வரும். உதாரணமாக நிகழும் பிரசோற்பத்தி ஆண்டில் ஆனி மாதத்தில் இரண்டு அமாவாசைகள் வந்திருக்கின்றன. ஆனி௴ 2௳ அமாவாசையோடு சாந்திரமான ஆனி௴ முடிகிறது. 3௳ தொடங்கி 31௳ முடிய சாந்திரமான ஆடி மாதம். ஆனால் இந்தச் சாந்திரமான ஆடிமாதமோ சௌரமான ஆடியோடு சேராமல் ஆனி மாதத்திலேயே முடிந்து விடுகிறது. ஆகையால் சாந்திரமானிகள் இந்தச் சாந்திர ஆடிமாதத்தை அதிக ஆடிமாத (அதாவது போய் ஆடிமாத) மென்று தள்ளிவிட்டு சௌரமான ஆடிமாதத்தோடு சம்பந்தப்பட்டுள்ள, அதாவது ஆடி௴ 1௳ பிரதமை முதல் தொடங்கி ஆடி௴ 29௳ அமாவாசையோடு முடிவாகிற சாந்திரமாதத்தையே நிஜ (அதாவது உண்மையான) சாந்திர

ஆடிமாதமாகக் கொள்கிறார்கள். இதனால் சௌரமானமே நிலையுள்ள தென்பதும் சாந்திரமானம் நிலையில்லாததென்பதும் சௌரமானத்தோடு சேராத சாந்திரமானம் பொய்யானதே (அதிமாதமே)னச் சாந்திரமானிகளே உடன்பட்ட நடையினரென்பதும் வெளிப்படை. இதனாலேயே தனித்தியங்கும் நிலையுள்ளதாகிய சௌரமானத்திலேயே திருவிழாக்களும் நோன்புகளும் நடைபெற வேண்டுமெனவும் தனித்தியங்கும் நிலையற்றதாகிய, சௌரமானத்தைச் சார்ந்து நடை பெறுவதாயுள்ள சாந்திரமானப்படி அவை நடைபெற்றால் மக்களுக்குப் பல கேடுகள் விளையும் எனவும் சிவாகமங்களெல்லாம் பல இடங்களிலும் எடுத்தோதுகின்றன. சாந்திரமானக் கொள்கையார் தங்களுடைய வீடுகளில் மண முதலிய மங்களச் சடங்குகளை நடைமுறையில் சாந்திரமானப்படிச் செய்யாமல் சௌரமானப்படியே செய்துவருகிறார்கள்.

நிகழும் ஆண்டில் சாந்திரமானத்தில் அதிமாதம் வந்தபடியால் நவராத்திரி விழாவைச் சாந்திரமானிகளாகிய ஸ்மார்த்தப் பிராமணர்கள் புரட்டாசி மாதக் கடைசியில் தொடங்கி ஐப்பசி மாதத்தில் மகாநவமி விஜயதசமிகளைத் தமது பஞ்சாங்கங்களில் குறித்திருக்கின்றார்கள். அது முற்றிலும் தவறானதும் சிவாகமவிதிக்கு மாறானதுமாகும். காமிகாகமம், மகுடாகமம், அசிதாகமம், காரணாகம விசயதசமிவிதி, அகோரசிவாசாரியார் மகாநவமி பூசாவிதி, நிச்வாசகாரிகை, முதலிய மூலாகமங்களும் பத்ததிகளும் நவராத்திரியானது சௌரமானப்படி புரட்டாசி மாதத்தில் மகாநவமியை முடிவாகக் கொண்டு நடைபெற வேண்டுமென்று விதித்திருக்கின்றன. அவ்விதி கொண்டு சைவப்பஞ்சாங்கத்தில் குறித்துள்ளபடி நிகழும் பிரசோற்பத்தி ஆண்டு ஆவணிமீ 27உ சனிக்கிழமை நவராத்திரி விழா தொடங்கி புரட்டாசிமீ 4உ ஞாயிறன்று மகாநவமியைக் கொள்வதே நலம்.

இதே மாதிரி சென்ற மூன்றாண்டுகளுக்கு முன் விபவ(வரு)த்தில் மாறுபாடு தோன்றியபோது 1928-ம்(வரு) அக்டோபர்மீ 6, 7-ம் உ களில் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் வசந்த மண்டபத்தில் கூடிய பேரவையில் தேவகோட்டை சிவாகம பரிபாலன சங்க ஆகம பரிசோதகர் வியாகரண சிரோன்மணி திரு. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்களும் சைவப் பஞ்சாங்க கணிதர் வித்வான் திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் பல ஆகம கணித நூல்களிலிருந்து தக்க ஆதாரங்களை எடுத்துக் காட்டி விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தர் சஷ்டி உற்சவங்கள் சௌரமானப்படிதான் நடக்கவேண்டுமெனவே நிலை நாட்டினார்கள். அப்பேரவை யாரும் அதுதான் சரியெனத் தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். அங்ஙனமே திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், திருக்குற்றாலம் முதலிய எல்லாக் கோவில்களிலும் அவ்விழாக்கள் சௌரமானப்படியே நடைபெற்றன. தருமபுர ஆதீன கர்த்தரவர்களும் அதுவே பொருத்தமெனத் தங்களுடைய ஆளுகையிலுள்ள கோவில்களில் அவ்விழாக்களை நடத்தினார்கள். அந்த விபவ ஆண்டில் பாம்பே முதலிய மாகாண வாசிகள் தங்கள் ஆலயங்களிலும் வீடுகளிலும் சௌரமானப்படியே நவராத்திரி விழாவைக் கொண்டாடியுள்ளார்கள். ஆதலின் நிகழும் ஆண்டிலும் சைவ மடாதிபதிகளும், சென்னை என்டௌமென்டு போர்டாரும், கோவில் கமிட்டியார்களும், தர்மகர்த்தர்களும், இந்து சமயப் பெருமக்களும் தங்கள் ஆளுகையிலுள்ள திருக்கோவில்களில் ஆவணிமீ 27உ சனிக்கிழமை நவராத்திரி விழா தொடங்கி புரட்டாசிமீ 4உ ஞாயிறன்று மகா நவமியும் 5உ திங்களன்று விசயதசமியும் நடைபெறுமாறு வேண்டும் ஏற்பாடுகள் செய்யும்படி அவர்களைத் தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தாராகிய நாங்கள் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறோம்.

M. V. NELLAIAPPA PILLAI,
For தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்.
20—7—1931.



---

# சரஸ்வதி பூசையும் ஏடு தொடங்கலும்

## புரட்டாசி மாதத்திலேயே செய்யவேண்டும்.

"கன்னியா ராசியில் சூரியனிருக்கும் பொழுது வருகிற வளர்பிறைக் காலமே தெய்வங்களை வழிபடுவதற்குரிய சிறப்புக் காலம். சூரியன் சிங்க ராசிக்கு வரும்பொழுது தன் வீட்டை அடைவதாகச் சொல்லப்படுகிறது. அவனுக்கு மேடம் உச்ச வீடென்றும், தனுசு நட்பு வீடென்றும் சொல்லப்படுகின்றன. மேட சிம்ம தனுசுக்கு ஒரு திரிகோணமென்பது பெயர். சூரியன் கன்னியில் நுழையும் காலமாகிய புரட்டாசி மாதமானது புவனத்திலுள்ள சக்திகளெல்லாம் விகாசத்தை அடைகின்ற காலம். அதாவது புரட்டாசி மாதத்தில் சூரிய கிரணங்களின் பயனும் பூமியிலுள்ள பலவித பௌதிக சக்திகளும் சம்பந்தப்படுவதினால் எல்லாப் பொருள்களும் விருத்தியடைய ஆரம்பிக்கின்றன.

"இவ்வுலகத்தில் பிரவர்த்தியை யுடையவர்களாய் காமிய கிருத்தியங்களை வகிக்கும் உயிர்கள் அவரவர்கள் விரும்புகிற காம பலன்களை யடைவதற்குக் கன்னியை யடைந்த சூரியன் மூலமாக மாய் அவச் சின்னஞகிய சகுணேசுவரனை ஆராதிக்கிறார்கள். அந்த ஆராதனைக்குக் கன்னியும் சூரியனும் சேருகின்ற புரட்டாசி மாதமே பொருத்தமாகக் கருதப்பட்ட காலம். இந்த ஆராதனை புத்தியினால் அதாவது சிரத்தையோடு அநுட்டிக்கப்பட வேண்டியதாகையால் புத்திக்கு அதிட்டான சத்தியாகிய புதனுக்குக் கன்னியை ஆட்சிவீடாகவும் மூலத்திரிகோண வீடாகவும் சொல்லப்படுகிறது. இம்முறையாகவே ஞானத்தைக் குறிக்கின்ற தனுசில் சூரியனிருக்கும் பொழுது, அதாவது மார்கழி மாதமானது, விருப்பற்றுச் செய்கிற நிஷ்காமிய பூசைக்குரிய காலம் இந்த உபாசனை ஞானத்தினால் அதாவது வித்தையோடு அனுஷ்டிக்கப் படவேண்டிய தாகையால் ஞானத்துக்கு அதிட்டான சத்தியாகிய வியாழனுக்கு தனுசை ஆட்சி வீடாகவும், மூலத் திரிகோண வீடாகவும் சொல்லப்படுகிறது. தனுர் மாத பூசையும், ஆருத்திரா தரிசனமும், வைகுண்ட ஏகாதசியும், மார்கழி மாதத்தில் அனுஷ்டிக்கப் படுவதைக் காணலாம்.

"ஆகவே மேலே விவரித்தபடி ஆத்மாவுக்குப் பிரேரகனான சூரியன் புத்திக்குப் பிரேரகனான புதன் வீடாகிய கன்னியிலிருக்கும் காலம், அதாவது புரட்டாசி மாதமானது காமியமான ஆராதனைகளுக்குப் பொருத்தமான சமயமென்று கைக்கொள்ளப்பட்டிருக்கிறது."

இது 'பூரண சந்திரோதயம்' என்ற பத்திரிகையின் கி. பி. 1910, 1911-ல் வெளிவந்த முதற்றொகுதி பக்கங்கள் 259-268, 334-341 "மகாலய பக்ஷமும் நவராத்திரியும்" எனத் தலைப்பிட்டு திரு. P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் விவரமாக எழுதியிருப்பதிலிருந்து தொகுக்கப்பெற்றது. இதனால் நவராத்திரி விழா புரட்டாசி மாதத்தில்தான் நடைபெறவேண்டு மென்பதும் உயிருக்குத் தலைவனாகிய சூரியன் புத்திக்குத் தலைவனாகிய புதனுடைய ஆட்சி வீடாகவும் மூலத்திரிகோண வீடாகவுமுள்ள கன்னியாராசியில் இருக்கின்ற காலமாகிய புரட்டாசி மாதத்திலேயே பிள்ளைகளுக்கு ஏடு தொடங்குதல் விழா நடைபெற வேண்டுமென்பதும் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை.

---



# தென்புலத்தார் யார்?

[ஆசிரியர் மறைமலையடிகள் எழுதியது]

(௨௯௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, ஆரியர் தம் மூதாதைகளை வழிபடும் முறையும், தமிழர் தம் மூதாதைகளை வழிபடும் முறையுந் தம்மிற் பெரிதும் வேறுபடுவ வென்பது காட்டுதும். ஆரியர்க்கு மிகப் பழைய நூலாகிய இருக்கு, எசுர், சாமம், அதர்வம் முதலிய நான்கு வேதங்களிலேனும், அவற்றின்கட் சொல்லப்பட்ட வேள்விகள் இங்ஙனம் வேட்கற்பால என அவற்றின் முறைகளை விரித்து அவ் வேதங்களுக்கு உரைநூல்களாய் எழுந்த பிராமணங்களிலேனும் உயிர்களுக்கு ஊழ்வினையும் மறுபிறவிகளும் உண்டென்பது எட்டுணையுங் காணப்படவில்லை. அதனால், இறந்த உயிர்கள் தாஞ் செய் ஊழ்வினையால் மீளப் பிறக்கும் என்னும் உண்மையைப் பண்டைநாளில் இருந்த ஆரியர்கள் சிறிதும் உணர்ந்தவரல்ல ரென்பது நன்கு புலனாகும். ஆகவே, இறந்து இயமனுலகை யடைந்த தம் முன்னோர்கள் எஞ்ஞான்றும் இன்பம் நுகர்ந்தபடியாய் ஆண்டிருப்பரெனவே அவர்கள் நம்பி வந்தார்கள். அவ்வாறு கொண்ட தமது நம்பிக்கைக்கு ஏற்பவே, இறந்துசென்ற தம் பெற்றோர்க்கும் மூதாதையர்க்குஞ், சோமச்சாறு பால் தேன் சுரா நெய் முதலியவைகளையுந் தாம் உணவாக அருந்திவந்த விலங்கின் இறைச்சிகளையும் படைத்து, நாடோறுஞ் செய்யப்படுவதாகிய 'பிதிர்யஞ்ஞத்'தையுந், திங்கடோறுஞ் செய்யப்படுவதாகிய 'பிண்டபிதிர்யஞ்ஞத்'தையும், ஆண்டுதோறுஞ் செய்யப்படுவதாகிய சிரார்த்தத்தையுஞ் செய்து,

> "தூய புல்லின்மேல் அமர்ந்திருக்கும் மூதாதையரே, வந்து
> எமக்கு உதவி செய்க; இப்படையலை நுங்களுக்காகச்
> செய்துவைத்தோம்; அவற்றை ஏற்றுக்கொள்க.
>
> மிக மங்களமான விருப்பத்துடன் வந்து, சிறிதும் வருத்தமின்றி
> எங்களுக்கு உடம்பின் நலத்தையுஞ் செல்வத்தையுந்
> தந்திடுக!"

(இருக்கு, ௧0, ௧௫, ௪) என்று அவர்களை வேண்டிக் குறையிரந்து வந்தார்கள்.

இதுவேயுமன்றிப், பழைய ஆரியர்கள் இறந்துபோன தம்மவர்க்குச் செய்துபோந்த சவச்சடங்கிற்குந், தமிழ்நாட்டவர் செய்துபோந்த சவச்சடங்கிற்கும் உள்ள மாறுபாடு பெரியதொன்றாய்க் காணப்படுகின்றது. இறந்துபோன தம்மவர் உடம்பை ஆரியர் தீயிலிட்டுக் கொளுத்துதற்கு முன், முதலில் ஒரு வெள்ளாட்டையும் அதன்பின் ஓர் ஆவையும் (பசு மாட்டையும்) கொன்று, அவற்றின் உடம்பிலிருந் தெடுத்த ஊனையுங் கொழுப்பையும் எலும்பின் மூளையையும் அப் பிணத்தின்மேல் முற்றும் பொதிந்து, அதன்பின் அதனைத் தீயிலிட்டுக் கொளுத்தி வந்தனரென்பது இருக்குவேத ௧0-ஆம் மண்டிலத்து ௧௬-ஆம் பதிகத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வாறு செய்வதனால், நெருப்பானது இறந்தவன் உடம்பைச் சுடாதென்று பழைய ஆரியர் நம்பிவந்தனர். இங்ஙனம் பிறவுயிரின் ஊனைப் பொதிந்து தம்மவர் உடம்பை எரித்தால், அவருடம்பை நெருப்புச் சுடாதென்று நம்பின ஆரியர், இறந்து இயமனுலகு சென்ற தம்மவர் எப்போதும் அங்கிருந்தபடியே இன்பம் நுகர்ந்திருப்பரெனவும், அவர்பொருட்டுத் தாம் இங்கே படைக்கும் ஊனும் உணவும் இயமனுலகிலிருக்கும் அவர்கள்பாற் சென்று அவர்கட்கு உண்டியாகப் பயன்படுமெனவும் நம்பிவந்தது வியப்பன்று; ஏனென்றால், "அம்புலியில் ஒளவையார் நூல் நூற்கின்றார்" என்றால், அதனை நம்புகின்றவர் கூட்டமும் இங்கு மிகுதியாய் இருக்கின்றதன்றோ?

மற்றுத், தமிழ்மக்களோ பண்டைக்காலந் தொட்டு "இறந்தவுயிர் மீளப் பிறக்கும்" என்னும் உண்மையைக் கண்டறிந்தவர் ஆவர். முற்பிறவிகளிற் செய்த வினைகள் ஒரு தொகுதியாய் 'ஊழ்' என நின்று பிற் பிறவிகளுக்குக் காரணமாதலை அவர்கள் நன்கறிந்து, அதனைப் "பால் வரைதெய்வம்" என வழங்கி வந்தமை, தமிழர்க்குரிய மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்தால் தெளியப்படும்.* இறந்த உயிர்கள் தாஞ்செய்து

* சொல், இள.



தொகுத்த ஊழ்வினைக்குத் தக மறுபிறவிகளிற் செல்லும் இவ்வுண்மையைக் கண்டறிந்தமையால், பண்டைத் தமிழ்மக்கள் இறந்துபட்ட தம் பெற்றோர்க்கும் பாட்டன் பாட்டியர்க்கும் ஊணும் உடையும் படைத்து, அவற்றை ஆரியப் பார்ப்பனர்க்குக் கொடுத்தலாகிய 'சிரார்த்தத்'தைச் சிறிதுஞ் செய்தவரல்லர். இப் பிறவியில் நமக்குத் தாய்தந்தையரா யிருந்தவர் இதனை விடுத்து மறுபிறவியில் வேறு தாய்தந்தையர்க்குப் பிள்ளைகளாய்ப் பிறக்கின்றனரல்லரோ? இது நாலடியாரிற் போந்த,

" எனக்குத் தாயாகியாள் என்னை ஈங்கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்—தனக்குத்தாய்
ஆகியவளும் அதுவானால் தாய்த்தாய்க் கொண்
டேகும் அளித்திவ் வுலகு "

என்னுஞ் செய்யுளாலும், ஆசிரியர் மெய்கண்டதேவ நாயனார் தாம் அருளிச்செய்த சிவஞானபோதச் செம்பொருணூலிற்,

" கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து
விண்படர்ந்தத் தூடு வினையினாற்—கண்செவிகெட்
டுள்ளதே தோற்ற உளம்அணுவாய்ச் சென்றுமனந்
தன்ன விழுங்கருவிற் றான் "

என்றறிவுறுத்தியவாற்றானும் நன்கு தெருட்டப்படுதல் காண்க.

இதுவேயுமன்றி, வடநாட்டில் உள்ள இராமகாளி யென்னுஞ் சிறு பெண்பிள்ளையும், வேறு சிறார் சிலருஞ் சிலபல ஆண்டுகளுக்கு முன் தாம் பிறந்திருந்த பிறவிகளின் வரலாறுகளை நினைவு கூர்ந்து சொல்ல அவ்வரலாறுகள் அத்துணையும் உண்மையா யிருத்தலை அப் பக்கங்களில் உள்ளார் கண்கூடாய் அறிந்திருக்கின்றனர் அல்லரோ? இராமகாளி என்னும் அப்பெண் முற்பிறவியிற் பெற்ற மக்கள், அவளை நோக்கிச் செய்து பார்ப்பனர்க்குக் கொடுத்த ஊணும் உடையும் பிற பண்டங்களும் அவளுக்கு இப் பிறவியில் வந்து பயன்பட்டனவா? சிறிதும் இல்லையே. அதுபோலவே, இறந்துபட்ட தம் தாய்தந்தையரை நோக்கி நம்மனோர் இப்போது செய்யுஞ் சிரார்த்தமும், அதிற் பார்ப்பனர்க்கு அவர்கள் வழங்கும் பண்டங்களும் வேறு பிறவிகளிற் சென்று பிறந்திருக்கும் அவர்களுக்குச் சிறிதும்

பயன்படாவென்பது திண்ணம். இவ்வுண்மை கண்டே வேத நூற் புலமையிற் சிறந்த தயானந்தசரசுவதி சுவாமிகளும் தாம் இயற்றிய சத்தியார்த்தப் பிரகாசிகையின்கண், இறந்துபட்ட தம்மவரை நோக்கி நம்மனோர் சிரார்த்தஞ்செய்து பார்ப்பனர்க்கு உணவுப் பண்டங்களும் பிறவும் வழங்கல் பயனற்றதென வற் புறுத்தி வரைந்திருக்கின்றார். ஊழ்வினையும் அதனாற் பிறவிகள் அடுத்தடுத்து வருதலும் அறியாத பண்டையாரியர், தம் மூதாதையர் எஞ்ஞான்றும் இயமனுலகில் இருப்பரென நம்பினராகலின், அவர் அவ்வறியா நம்பிக்கையால் தம் மூதாதையரை நோக்கிச் சிரார்த்தங் கொடுத்தது வாய்வதேயாம். மற்று, நம் பண்டைத் தமிழ்மக்களோ மிகப் பழைய நாளிலேயே ஊழ்வினையின் இயல்பும், அதனால் உயிர்கள் அடுத்தடுத்துப் பிறவிகளிற் சேறலும் நன்காராய்ந்து கண்டவராகலின், அவர்கள் தம் மூதாதையரை நோக்கிச் சிரார்த்தங் கொடுத்திலர். மற்று, அவர் தமது பண்டைத் தமிழகத்திலிருந்து உலகமெங்கணும் நாகரிகத்தைப் பரவச்செய்த தம் முன்னோர்கள் அனைவரையுமே பொதுவாகத் 'தென்புலத்தார்' எனக்கொண்டு அவரை நினைவுகூர்ந்து நன்றிக் கடன்செலுத்தி வந்தனரென்பதே தேற்றமாம். இதுவே தென் புலத்தாரை ஓம்புதலாகு மென்று திருக்குறள் கூறிற்றென்க. அதனாலன்றோ, சிராத்தங் கொடுக்கும் முறைகளை வடமொழிக் கண் உள்ள மிருதிநூல்கள் கூறுமாப்போற், பழைய தமிழ்நூல் கள் எவையுஞ் சிறிதுங் கூறுவாயின? 'சிரார்த்தம்,' 'திதி,' 'திவசம்' முதலிய சொற்கள் வடமொழியே யன்றித் தமிழ் மொழி யல்லாமையுந், தமிழர்க்குள் அவ் வீண்வழக்கம் இல்லாமையின் அதனைக் குறிக்குந் தமிழ்ச் சொல்லும் இல்லாமையும் யாங் கூறும் இவ் வுண்மைக்கு உறு பெருஞ்சான்றா மென்க.

அற்றேற், பிதுரர்கள் தென்புலத்தில் உள்ளவர்களாகக் கூறும் வழக்கு யாங்ஙனம் வந்தது? எப்போது வந்தது? என்று அறிய விரும்புவார்க்கு, அவ் வரலாற்றினையும் ஈண்டொரு சிறிது விளக்கிக் காட்டுதும். தேவர்கள் உறையுந் துறக்கவுலகம் வடகிழக்கில் உள்ளதெனவும், பிதுரர்கள் உறையும் பிதுரவுலகந்



தென்கிழக்கில் உள்ளதெனவுங் கொள்ளும் வழக்கு முதன் முதற் சதபதபிராமணத்திலே தான் காணப்படுகின்றது.*

இச் சதபதபிராமணம் இயற்றப்பட்ட காலத்தில், ஆரியர்கள் பெருந்தொகையினராகத் தென்றமிழ்நாட்டிற் குடிபுகுந்திலரேனுந், தென்றமிழ் நாட்டிலிருந்து வடநாடு சென்று போந்த தமிழ்மக்கள் வாயிலாகவும், வடநாட்டிலிருந்து தென்றமிழ் நாடு புகுந்து திரும்பிய தமிழ்மக்கள் வாயிலாகவுந் தமிழ்மக்களின் நாகரிக வரலாறுகளை அறிந்துகொண்ட பண்டை அவ்வாரியர்கள், தாம் இயற்றிய இந்நூலின்கண் தமிழர் வணங்கிய முழுமுதற்கடவுளையும், அவர்தம் வழக்கவொழுக்கங்களையுஞ் சிறிது சிறிதாகத் தழுவி யுரைக்கலாயின ரென்பது ஆராய்ச்சியாற் புலனாகின்றது. தெற்கிருந்து வடநாடு தொடுத்து இவ்விந்தியநாடு முற்றும் அஞ்ஞான்று தமிழ்மக்களே நிரப்பியிருந்தன ரென்பது இஞ்ஞான்றை வரலாற்று நூலாசிரியர் நடுநின்று ஆராய்ந்தெழுதியிருக்கும் நூல்களால் தெற்றென விளங்கா நிற்கும். †

பாண்டவர் ஐவர்க்குங் குருகுலமன்னர் நூற்றுவர்க்கும் பதினெட்டு நாள் வரையிற் பெரும்போர் நடந்த ஞான்று, பாண்டவர்க்கு நண்பனுந் தென்றமிழ்நாட்டுச் சேரமன்னனுமான உதியஞ்சேரலாதன் என்பான் அப் பாண்டவர் படைக்கு அப் பதினெட்டு நாளும் அறச்சோறு வழங்கிப், 'பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்' என அக் காலத்துச் சான்றோர்களால் உயர்த்துப் பேசப்பட்டமை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய "மண்டிணிந்த நிலனும்" என்னும் புறநானூற்று முதற் செய்யுளால் நன்கறியக் கிடக்கின்றதன்றோ? இவ்வுதியஞ் சேரலாதன் மகனாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பதிற்றுப்

---

| | | | | |
|---|---|---|---|---|
| *சதபதபிராமணம், | ௯-ஆம் கண்டம், | ௯-ஆம் அத்தி, | ௨-ஆம் பிராமணம், | ௪. |
| ,, | ௧௨- | ,, ௭- | ,, ௩- | ,, ௧. |
| ,, | ௧௩- | ,, ௮- | ,, ௧- | ,, ௬. |

† Read Prof. Rhys Davids' Buddhist India, pp. 44, 45, 56, 116, 119, 149, 151, 156, 211, and the chapter VIII of Ragozin's Vedic India.

பத்தின்கண் மூன்றும்பத்திற் புகழ்ந்து பாடிய கோதமனார் என்னும் நல்லிசைப் புலவரே பாண்டவரில் முதல்வனான தருமபுத்திரனையும் புகழ்ந்து பாடிய "விழுக்கடிப்பு அறைந்த" என்னுஞ் செய்யுள் ஒன்றும் 'புறநானூற்'றிற் காணப்படுகின்றது. இங்ஙனமே வான்மீகியார், மார்க்கண்டேயனார் என்னும் நல்லிசைப் புலவர்கள் பாடிய செய்யுட்களும் 'புறநானூற்'றின்கட் காணப்படுகின்றன (௩௫௮, ௩௬௫). "இனித் தமிழ்ச்செய்யுட்கண்ணும், இறையனாரும் அகத்தியனாரும் மார்க்கண்டேயனாரும் வான்மீகனாருங் கௌதமனாரும் போல்வார் செய்தன தலை" யாய ஓத்து என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் புறத்திணையியல், ௨௦-ஆஞ் சூத்திரவுரையிற் கூறுதல்கொண்டு, மேற்கூறிய முரஞ்சியூர் முடிநாகராயரும், கோதமனாரும், வான்மீகியாரும், மார்க்கண்டேயனாரும் எல்லாம் பாண்டவர் காலத்தவ ரென்பது உய்த்துணரக் கிடக்கின்றதன்றோ? ஆகவே, வடக்கே பாண்டவ அரசர் இருந்த மிகப் பழைய காலத்தே, இத்தென்னாட்டின்கண் மட்டுமேயன்றி, அவ் வடநாடெங்கணுந் தமிழ் மக்களுந் தமிழ் மன்னர்களுந் தமிழ்ச் சான்றோர்களும் நிறைந்திருந்தனரென்பது பண்டைத் தமிழ்ச் செய்யுள் வரலாறுகளானும் நன்கறியக் கிடக்கின்றமை காண்க.

இனிப், பழைய நாளில் வடக்கே குடிபுகுந்த ஆரியர் தமிழ்மொழியின் இயல்பையும் அமைப்பையும் நோக்கியே தமது ஆரிய மொழியினைச் சீர்திருத்தி, ஏராளமான தமிழ்ச் சொற்களையுந் தம்முடைய ஆரிய நூல்களிற் புகுத்தினரென்னும் உண்மை இப்போது வடமொழி வல்ல மேல் நாட்டாசிரியர்களாலே நன்கெடுத்துக் காட்டப்பட்டு வருகின்றது.† அரை நூற்றாண்டுக்கு முன்னமே கால்டுவெல் (Dr. Caldwell) என்னும் ஆசிரியர் தாம் அரிதாராய்ந் தெழுதிய 'திராவிட மொழிகளின் இலக்கண ஆராய்ச்சி' என்னும் விழுமிய நூலில், தமிழ்மொழி இவ்விந்தியா நாடெங்கணும் அதற்குப்பாலும் பரவியிருந்த உண்மையினை எவரானும் மறுக்க இயலாத அரியபெரிய

† See for instance 'The Cambridge History of Ancient India,' pp. 41-42.



சான்றுகளால் நன்கு நிறுவியிருக்கின்றார். அவரெடுத்துக் காட்டிய பல சான்றுகளுள், நாவிற்பிறக்கும் மெய்யெழுத்துக்கள் சில தமிழ்மொழி யினத்திற்கே உரியனவென்றுந், தமிழருடன் வந்து கலவாதமுன் அவ்வெழுத்துக்களை யுடையரல்லாத ஆரியர், அவருடன் வந்து கலந்த பின்னரே அவற்றை யெடுத்துத் தம் மொழியிற் சேர்த்துக் கொண்டன ரென்றுந் தெள்ளிதின் விளக்கிக்காட்டி யிருக்கின்றார்.*

இங்ஙனமெல்லாம் மேனாட்டாசிரியர் நடுநின்று மிக ஆழ்ந்தாராய்ந் துரைக்கும் உரை, இச் சதபதபிராமண ஆராய்ச்சியினாலும் மேலும் உரம் பெற்று உண்மையாக விளங்குதலை ஈண்டொரு சிறிது காட்டுதும். இருக்கு, எசுர், சாமம், அதர்வம் என்னும் நான்கு நூல்களில் எங்குங் காணப்படாத 'மகாதேவன்' என்னுஞ் சிவபிரான் றிருப்பெயர் இச்சதபத பிராமணத்தின் ஐந்தாங் காண்டத்திலேதான் (௩, ௫) முதன் முதற் காணப்படுகின்றது. இதுகொண்டு, நாகரிகத்திற் சிறந்த தமிழ் முதுமக்கள் வழிபட்டுவந்த சிவபிரானே எல்லாத் தேவர்க்கும் பெரியோன் என்னும் உணர்ச்சி இந்நூல் எழுதிய காலத்திற்றான் ஆரியர்க்கு முதன்முதல் உண்டாயிற்றென்பது நன்கு புலனாம். தாம் வணங்கி வேண்டிவந்த தேவர்களெல்லாருந் தம்போற் பிறந்து இறக்கும் மக்களுயிர்களே யல்லாமற், பிறந்திறவாச் சிவத்தோடு ஒத்தவராகா ரென்னும் மெய்யுணர்வு சதபத பிராமண காலத் தாரியர்க்கு உண்டாயது, அஞ்ஞான்று அவர் தமிழ் மேன்மக்களுக்கு அடங்கி அவர்க்கு அணுக்கராய் ஒழுகி, அவர்பால் அம் மெய்யுணர்வினைப் பெற்றமையினாலேயாம். இவ் வுண்மை இச் சதபத பிராமணத்தின் இறுதிக்கண் உளதாகிய பிருகதாரணியகோப நிடதத்தை உற்று நோக்குதலானும் நன்கு விளங்கும். 'கார்க்கிய பாலாகி' என்னும் ஆரியப் பார்ப்பனன் 'அஜாதசத்துரு' என்னுந் தமிழ் மன்னனை யடுத்து அவனாற் சிவத்தினியல்பு அறிவுறுத்தப்பட்ட வரலாறு, இப்பிருகதாரணிய கோப நிடதத்தின் கண்ணேயே விளக்கமாகச் சொல்லப்

* Dr. Caldwell's 'A Comparative Grammar of the Dravidian Languages,' 3rd edition, pp. 147-191.

பட்டிருக்கின்றது (உ, ச). தமிழ அரசர்களை யெல்லாம் அஞ்ஞான்றிருந்த ஆரியர் 'க்ஷத்திரியர்' என்று வழங்கின வரலாறுகளை எம்முடைய வேளாளர் நாகரிகம் என்னும் நூலினுஞ் சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் என்னும் நூலினுஞ் சான்றுகளுடன் விளக்கிக்காட்டி யிருக்கின்றேம்.

இன்னும், பண்டைத் தமிழர்கள் முழுமுதற்கடவுளை அப்பன் வடிவிற் சிவபிரானுக வைத்து வணங்கியது போலவே, அதனை அருள் நிலையான அம்மை வடிவில் வைத்துத் திருமாலாகவும் வணங்கி வந்தனர். ஆகவே, வடநாட்டின்கண் இருந்த தமிழரோடு கலந்து அவரது சிவ வழிபாட்டைத் தெரிந்து கொண்டு அதனைப் பாராட்டிய சதபதபிராமண காலத்தாரியர், அவர் செய்துபோந்த திருமால் வழிபாட்டையுந் தெரிந்து அதனையும் இந்நூலின் பதினொன்காங் காண்டத்திற் சிறப்பித்துப் பேசியிருக்கின்றார். "விஷ்ணு தேவர்களிற் சிறந்தோன்" என்னுஞ் சொற்றொடர் இதன்கட் காணப்படுகின்றது. 'விஷ்ணு' என்னுஞ் சொல் இருக்கு வேதத்திற் காணப்படினும் ஆண்டவ பகலவனையே குறிக்கின்றது. மற்றுச், சதபத பிராமணத்திலோ விஷ்ணு ஒரு தனித் தெய்வமாகவுந், தேவர்க்குள் நிகழ்ந்தபோரில் வெற்றி பெற்றுச் சிறந்த தலைமை யுடையதாகவுஞ் சொல்லப்படுகின்றது. இவ்வாறு அத் தெய்வத்திற்கு ஆரியர் தலைமை கொடுக்கத் துவங்கியது, அவர் தமிழரது திருமால் வணக்கத்தைத் தெரிந்து கொண்ட பின்னரேயா மென்பது அறியற்பாற்று.

(தொடரும்.)

---

## பிரசோற்பத்தி வருட
## சைவப் பஞ்சாங்க அச்சுப்பிழை

கிரகணம் பக்கம் 19-ல் புரட்டாசி 10உக்கு (26-9-31) என்றும், பங்குனி 20உ என்றது 10உ என்றும் (2-4-32) என்றது (22-3-32) என்றும் இருத்தல் வேண்டும். 32, 44-ம் பக்கங்களில் அவ்வத் தேதிகளில் சரியாய்க் குறிக்கப்பட்டிருக்கிறது. 19-ம் [illegible]த்தில் தனியாக எடுத்தெழுதியதில் நேர்ந்த பிழை அச்சுப் பிழை [illegible]யன்றிக் கணிதருடைய பிழையன்று.

# புதிய கழக வெளியீடு

---

1. ஜிஞேவாவீரன் அல்லது கோலம்பசு வரலாறு:—

இஃது எளிய இனிய உரைநடைகொண்டு திகழ்வது. இது கற்பவர்க்கு மனவெழுச்சி தருவதோடு சோம்பல் தவிர்த்து முயற்சியிற் புகுத்திப் புகழை நல்குவது. அழகிய பதிப்பு விலை அணு 6.

2. நளாயனி அல்லது நங்கையர்க்கரசி:—

நளாயனியின் வரலாறு பாரதக் கதையில் கூறப்பட்டிருப்பினும், இந்நூல் புதிய முறையில் சிறந்த பழமொழிகளைப் பிணைத்தும் முன்னோர் நூல்களிற் பயின்று வரும் அரும்பொருளடங்கிய சொற்றொடர்களை இடநோக்கி யமைத்தும் அழகுபட எழுதப்பட்டிருக்கின்றது. உளங்கவரும் நடையழகு வாய்ந்தது. இதன் விலை அணு 7.

3. பொன் கதைக்கோத்து (க. ப. சந்தோஷம் எழுதியது)

இதன்கண் பொன் சம்பந்தமான நான்கு அருமையான ஆங்கில நாட்டுக் கதைகள் இனிய தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. விலை அணு 4.

4. தோமாஸ் ஆல்வா எடிசன்:—

இவர் அமெரிக்காவில் 1847-ல் பிறந்தவர். மின்சார விளக்கு மின்சார வண்டி, கிராமபோன், டெலிபோன், தற்காலத் தந்தி சினிமா முதலிய ஆயிரக்கணக்கான புதுமைகளைக் கண்டு பிடித்தவர். இன்னும் புதிய புதிய கருவிகளைக் கண்டு பிடித்துக்கொண்டே வருகின்றார். இவரது வாழ்க்கை வரலாறு இப்போதுதான் முதன் முதல் தமிழில் வெளிவந்துள்ளது. இது படிக்கப்படிக்க இன்பந்தரும். இனி நாட்டுக்கு இத்தகையார் வரலாறே நனிபயன் தரும். மாணவர்கட்கும்
ராப்பர் பதிப்பு அணு 12 கலிக்கா ரூபா 1 4

5. நளவெண்பா மூலம் (புகழேந்திப் புலவர்) அணு 6

6. முல்லைப்பாட்டு விளக்கம்

இது பத்துப் பாட்டில் ஒன்று. இதன்கண் நச்சினார்க்கினியருரையும், கொண்டு கூட்டும், பதவுரையும், அருஞ் சொற்பொருளகராதியும் அடங்கின. அழகிய திருத்தமான பதிப்பு விலை அணு 10

7. திருவிளையாடற் புராணம்
திருவாலவாய்க் காண்டம் உரை (வெளிவந்து விட்டது) ரூ 7 8

8. திருவிளையாடல் மூலம்

அரும்பதவுரையும், இரண்டு ஆப்டோன் படங்களும் பாட்டு முதற் குறிப்பகராதியு மடங்கியது. விலை ரூ. 4 0

9. இளஞ்சேய்க் கோலி (புதிய பதிப்பு) 0 8
திரு. க. ப. சந்தோஷம் எழுதியது.

# புதிய தமிழ் நூல்கள்

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| பன்னூற்றிரட்டு (சங்கப் பதிப்பு) | 3 | 12 | திருவள்ளுவர் | 0 | 8 |
| | | | ஷை ஆங்கிலத்தில் | 0 | 8 |
| வைத்திய சாரசங்கிரகம் | 6 | 0 | கூடற்புராணம் | 0 | 12 |
| மகாபாரதம் அரும்பத வுரையுடன் | 5 | 0 | சாக்கரட்டஸ் (Socrates) வரலாறு | 1 | 8 |
| மதங்க சூளாமணி | 1 | 4 | | | |

| | ரூ. | அ. |
|---|---|---|
| பாலர் பரிபாலனம் (பண்டிட் S.S. ஆனந்தம்) | 1 | 0 |
| டாக்டர் மாசிலாமணியின் அநுபவ வைத்திய நூல் | 1 | 0 |
| காமாட்சி திருப்புகழ் | 0 | 8 |
| மணி திருநாவுக்கரசு முதலியார் வரலாறு | 0 | 8 |

மணி திருநாவுக்கரசு முதலியார் எழுதியவை

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| பல்பொருட் கட்டுரை | 1 | 0 | புலவர் சரிதை 2 பாகம் | 1 | 8 |

பல்லாவரம் மறைமலை யடிகள் எழுதியவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| சைவ சமயத்தின் நெருக்கடியான நிலை | 0 | 6 |
| மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் | 11 | 0 |
| பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம் | 1 | 12 |
| அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையும் ஞான யோகமும், கழகவிழா அறிக்கையும் | 1 | 0 |

---

| | ரூ. | அ. |
|---|---|---|
| இந்திய ஸ்தல யாத்திரை மான்மியம் The Indian Pilgrim's Guide | 1 | 4 |
| ஔவைக் குறள் மூலமும் உரையும் | 0 | 8 |

ஞான திரவியம் குமரேசனம்மாள் எழுதிய நாவல்கள்

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| சுகிர்தா | 0 | 14 | சுந்தரவல்லி | 0 | 10 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| பேரூர்ப் புராணம் மூலமும் வசனமும் கல்வெட்டாராய்ச்சியுடன், புதிய பதிப்பு | 2 | 12 |
| **பெண் நலன் (ஆ. வி. சித. சோக்கலிங்க னவர்கள்)** | 0 | 6 |
| **விநாயக புராண தத்துவ விளக்கம்** | 0 | 1 |
| நவராத்திரி விரதம் | 0 | 1 |
| தீபாவளி பண்டிகை | 0 | 1 |
| கடையெழு வள்ளல்கள் சரித்திரம் | 0 | 12 |
| அயல்நாட்டுப் பெரியோர் | 0 | 10 |
| சூரவாதித்த சோழன் | 0 | 12 |
| கிரியா காண்ட க்ரமாவளி என்னும் சோமசம்பு பத்ததி தேவநாகரி லிபியில் அச்சிடப்பட்டது | 2 | 8 |

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவழக்காரத் தெரு, சென்னை.

Printed by A. Rangaswamy at The Progressive Printers,
2-17, Coral Merchant Street and Published by V. Subbiah for